## நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 328 பிலவ வருடம், ஆவணி மாதம் 31ஆம் திகதி வியாழக்கிழமை (16.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 08, 0115886187 - பக்கங்கள் 10

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## கல்வியை கைவிடும் இரத்தினபுரி மாணவர்கள்

**ஆர். ரவீந்திரன்**

கொரோனா தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டு பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான மாணவர்கள் தமது கல்வியை கைவிடும் அபாய நிலை தோன்றியுள்ளதாக தோட்ட தொழிலாளர்கள் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சுமார் 100 தமிழ் மொழிமூல பாடசாலைகளில் 80 சதவீதமானவை தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளாகும்.

இப்பாடசாலைகளில் மொத்தமாக சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்பதாக கூறப்படுகின்றது. 02

## புதிய கட்டுப்பாடுகளுடன் 21ஆம் திகதி ஊரடங்கு தளர்வு;

## மாகாண போக்குவரத்துக்கு தொடர்ந்தும் தடைவிதிப்பு

**நா. தினுஷா**



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தற்போதைய முன்னேற்றங்களின் அடிப்படையில் நாடு விரைவில் திறக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா நேற்று (15) தெரிவித்துள்ளார்.

நாடு அடுத்த வாரம் மீண்டும் திறக்கப்பட்டால் விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் குறித்து தெரியப்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா ஒழிப்பு செயலணிக்கு அறிவுத்தியுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

எனவே, அடுத்த வாரத்திலிருந்து புதிய கட்டுப்பாடுகளை விதிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அத்தோடு புதிய கட்டுப்பாடுகளுடன் நாட்டை திறக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொவிட் ஒழிப்பு செயலணிக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் திரிபான டெல்ட்டா பரவல் காரணமாக கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பலமுறை நீடிக்கப்பட்டு செப்டெம்பர் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் செவ்வாய்க்கிழமையுடன் நாடு கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டாலும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து தொடர்ந்து அமுலில் இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். சிறைக்கு மாற்றுமாறு தமிழ்க் கைதிகள் கோரிக்கை

**அநுராதபுரத்தில் பாதுகாப்பின்மை குறித்து நீண்டகாலமாக அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிப்பு**

*நமது விசேட செய்தியாளர்*

**அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ்க் கைதிகளை அச்சுறுத்தியதையடுத்து, பாதுகாப்பு பிரச்சினை காரணமாக தம்மை யாழ்ப்பாண சிறைக்கு மாற்றுமாறு அவர்கள் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.**

**இதுவரை காலமும் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.**

**இது தொடர்பில் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு கைதிகள் அறிவித்துள்ளனர். அநுராதபுரத்தில் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக தொடர்ச்சியாக தெரிவித்துவரும் தமிழ்க் கைதிகள், யாழ். சிறைக்கு மாற்றுமாறு பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.**

## மிரட்டப்பட்ட கைதி யார்?

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மதியரசன் சுலக்ஷன் என்ற 33 வயது கைதியே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கரவெட்டி பகுதியைச் சேர்ந்த அவர், கடந்த 2009 ஆம் ஆண்டு சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மீதான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவருகிறது.

# பதவி துறந்தார் லொஹான்

## துப்பாக்கிமுனையில் தமிழ்க் கைதிகளை அச்சுறுத்தியதால் வந்த வினை



**(நா.தினுஷா)**

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு, துப்பாக்கி முனையில் கொலை அச்சுறுத்தல் விடுத்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்று (15) தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தனது அமைச்சுப் பொறுப்பை இராஜிநாமா செய்ததாகவும், தனது இராஜி நாமா தொடர்பாக, அவர் எழுத்து மூலம் அறிவித்த நிலையில், அதனை ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அலுவலகம் அறிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான், தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய சம்பவம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெரிதும் தாக்கத்தை உண்டு பண்ணியிருந்தது. ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் வருடாந்த அமர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், இவ்வாறான செயற்பாடு அரசுக்கு மேலும் அபகீர்த்தியை உண்டுபண்ணும் என்பதால் அவரை உடனடியாக அந்த பதவியில் இருந்து விலகுமாறு கேட்க அரச மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, லொஹான் ரத்வத்தவை உட னடியாக பதவி விலகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலியிலிருந்து பணிப்புரை விடுத்தார். 02

## கைதிகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை

### ஐ.நா. வலியுறுத்து

சிறைக்கைதிகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் நேற்று (15) தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுர சிறைச்சாலைக்குச் சென்று தமிழ்க் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய விவகாரம் சர்ச்சைக்குள்ளாகிய நிலையில், ஹனா சிங்கர் தனது கருத்தினை பதிவுசெய்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மண்டேலா விதிகளின் பிரகாரம் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். 02



**இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து நேற்று (15) தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.**

## வடிவேல் சுரேஷுக்கு கொலை அச்சுறுத்தல்!

**(நா. தினுஷா)**

ஐக்கிய தேசிய கட்சியினரால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு கிழக்கு பிரதேச மக்களின் காணி உரிமைகள்... 02

## அமைச்சரை சிறைக்குள் அனுமதித்தவர்கள் யார்?

### அவர்கள் மீதும் நடவடிக்கை அவசியமென பிரேமச்சந்திரன் வலியுறுத்து



**(யாழ். செய்தியாளர்)**

அநுராதபுரம் சிறைச்சாலையில் துப்பாக்கியுடன் சிறைக்குச் செல்ல அனுமதித்தோருக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்று (15) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். 02

## மத்தல விமான நிலையத்துக்கு நேற்றுமுதல் விசேட பாதுகாப்பு

**தீவிரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என பொலிஸாருக்கு தகவல்**

மத்தல மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று (15) பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

தங்காலையில் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் குழுவொன்றும் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தது.

தீவிரவாத தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதற்கமைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மஞ்சள் ஒரு கிலோகிராம் 6 ஆயிரம் ரூபா

**நா. தினுஷா**

நாட்டில் மஞ்சள் ஒரு கிலோ கிராம் ஆறாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக நுகர்வோரை பாதுகாக்கும் தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

மஞ்சள் விலையேற்றத்தினால் பொது மக்கள் மிகக் குறைந்தளவிலேயே மஞ்சளை... 02

## சுகாதார பரிசோதகர் மீது பிக்குகள் மூவர் தாக்குதல்

### அமைச்சரின் செயலாளர் எனக்கூறி கெக்கிராவயில் மிரட்டல்

**(ஜூட் சமந்த)**

பிக்குகள் மூவர் தமக்கு கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொடுக்குமாறு கோரி பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவமொன்று கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவர் தான் அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் என்று தெரிவித்து தனக்கு தடுப்பூசி பெற்றுக்கொடுக்குமாறும் அச்சுறுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக பொதுச் சுகாதார சங்கம் அறிவித்துள்ளது. அதற்கமைய, அரசியல் உதவியை காரணங் காட்டி எவருக்கும் தடுப்பூசி... 02

# சீராக நடக்கும் தடுப்பூசி திட்டத்தில் சிறிய குறைகளை பெரிதுபடுத்தாதீர்

## சுகாதார அமைச்சர் கெஹேலிய

**(கண்டி நிருபர்)**

நாட்டில் 800இற்கு மேற்பட்ட தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் சீராக இயங்கும் போது ஓரிரு இடங்களில் மட்டும் இடம் பெற்றுவரும் சிறிய குறைபாடுகளை ஊடகங்கள் பெரிதுபடுத்தக்கூடாது என நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பேராதனை வைத்தியசாலையில் வைத்தியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை சுற்றுலா விடுதிகளில் தங்கவைத்து அவர்களிடமிருந்து கூடுதல் பணம் அறவிடும் விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, தற்போது அது விடயமாக நடவடிக்கை எடுத்துவருகிறோம். இந்த விடயத்தில் ஏதோ குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன என அறியமுடிகிறது.

மேலும், இலங்கையில் நாளாந்தம் 12 ஆயிரம் பி.சி.ஆர். மற்றும் 5 ஆயிரம் வரையான அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொவிட் தடுப்பு தொடர்பாக நாம் பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதுடன், பெருந்தொகைப் பணத்தையும் செலவிட்டு வருகிறோம்.

தடுப்பூசி வழங்கும் செயல் திட்டத்தில் நாம் உலகளவில் குறிப்பிடத்தக்க இடத்தில் உள்ளோம். எமது வைத்தியர்களும், சுகாதாரத்துறை ஊழியர்களும் தமது உயிரைப் பணயம் வைத்தே கடமை புரிகின்றனர். தமது குடும்பங்களை விட்டும் தூரநின்று தியாகம் செய்கின்றனர். இந்நிலைகளை நாம் பாராட்ட வேண்டும். சுகாதார ஆய்வுகூட ஊழியர்கள் தமது பணியை சரியாகச் செய்கின்றனர். அதேநேரம் எம்முடன் நெருங்கி ஒத்துழைக்கின்றனர். அவர்களது கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்கிறோம் - என்றார்.

# நிதிச் சட்டமூலத்துக்கு சபாநாயகர் சான்று

2021ஆம் ஆண்டு 18ஆம் இலக்க நிதிச் சட்டமூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் கையெழுத்திடப்பட்டு சான்றுரைப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டமூலம் கடந்த 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 134 வாக்குகளும், எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நிதிச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பின் போது எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்புக் கோரியமையால் இந்தச் சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதற்கமைய இந்த நிதிச் சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் நேற்று (15) அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டபோது...
(படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே)

# இராஜாங்க அமைச்சரின் செயற்பாடு ஐ.நா.வுக்கு நீட்டப்பட்ட துப்பாக்கி

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது, தமிழ் மக்களின் அரசியலுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கும் நேராக நீட்டிய துப்பாக்கியாகவே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கருதுகின்றது. இத்தகைய அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாக கண்டிப்பதாகவும் அவ்வமைப்பு



தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பு நேற்று (15) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மனித உரிமைக்கு மதிப்பளிக்கின்ற நாடெனில் குறிப்பிட்ட அமைச்சருக்கு மனநல சிகிச்சை அளித்தல் வேண்டும். அதுவே இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு காட்டுகின்ற நல்லெண்ண சமிக்ஞையாக அமையும். இல்லையெனில் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு எதிராக செயல்படுகின்றது என்பதை சுட்டி நிற்கும்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும், இச்சட்டத்தால் நீண்ட காலம் சிறையில் வாடுவோரின் மனித உரிமை விடயமாகவும் ஆராய ஆட்சியாளர் குழு நியமித்திருப்பதாக கூறுவது கேளிக்கூத்தாக அமையும். அதுமட்டுமல்ல அரசின் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான செயற்பாடு ஐ.நா. மனித உரிமைப் பேரவையையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே அமையும்.

குறிப்பிட்ட அமைச்சரின் செயற்பாடு நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுவதோடு, உளவியல் ரீதியில் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிறைச்சாலை கைதிகளை பாதுகாக்க வேண்டிய அமைச்சரே இவ்வாறான ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படுத்தப்படுவதோடு, அனைத்து அரசியல் கைதிகளையும் பாதுகாப்பு மிகுந்த தமிழர் பிரதேசங்களின் சிறைச்சாலைகளுக்கு மாற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை கொடுக்கவேண்டும்.

இனவாத ஆட்சியாளர்கள் ஆசியாவின் அறிவாலயமான யாழ்ப்பாண நூலகத்தை எரித்து சாம்பலாக்கி, இனப்படுகொலையுடனான இன அழிப்போடு நின்றுவிடாது அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் நீதி கேட்டுக்கொண்டிருந்த நிலையில், அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நாட்டின் இனவாத அரசியல் தமிழ் மக்களை இனிவரும் காலங்களிலும் அடக்கி ஒடுக்கும் என்பதற்கு இன்னுமொரு சாட்சி இதுவாகும்.

இச் சம்பவத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலையுடனான இன அழிப்பிற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிகிடைக்க வழியேற்படுத்துமாறும், ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு கொண்டு செல்லுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாய காணிகளை தரிசு நிலமாக்க அரசு திட்டமிடுகிறதா? நுவரெலியா மாவட்ட விவசாயிகள் குற்றச்சாட்டு

**(தலவாக்கலை நிருபர்)**

நாட்டில் நிலவும் இரசாயன உரத்தட்டுப்பாடு, விவசாயத்தை மாத்திரம் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படும் விவசாயிகளை சொல்லொணா துயரங்களுக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கும் நுவரெலியா மாவட்ட விவசாயிகள், அரசு உரத் தட்டுப்பாட்டை அரங்கேற்றி விவசாய காணிகளை தரிசு நிலமாக்க திட்டமிடுகிறதா? எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

தாம் பயிரிடும் விவசாயப் பயிர்களுக்கு உரிய நேரத்தில் தேவையான உரத்தை வழங்க முடியாது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க தட்டுத் தடுமாறி வருவதாகவும் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊவா பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கையுடன் மரக்கறி பயிர்ச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா மாவட்டத்தில் உருளைக்கிழங்கு மற்றும் மலர் பயிர்ச்செய்கை நாளுக்கு நாள் பாதிப்படைந்து வருவதாகவும் விவசாயிகள்



சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் தாம் கையிருப்பில் வைத்திருந்த உரங்களை பயிர்ச் செய்கைக்கு பாவித்துவிட்ட நிலையில், தற்போது பயிர்களை அறுவடை செய்த பின்னர் அடுத்து பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு வழங்க உரமின்றி பாரிய பிரச்சினைக்கு தாம் முகம் கொடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, பிரதேச கமநல சேவை திணைக்களத்தின் ஊடாக கையிருப்பில் காணப்பட்ட குறைந்தபட்ச உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவும் முறையாக விநியோகிக்க தவறு இழைக்கப்பட்டுள்ள நிலையில் சிறு தோட்ட விவசாயிகள் இதன் மூலமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் காலங்களில் விவசாயத்தை கைவிட்டு வீதிக்கு வரும் நிலையும் தோன்றியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், சிறுபிள்ளை தனமாக விவசாயிகளை திசைத்திருப்ப நொண்டிச் சாக்குகளை கூறிவருவதாகவும் விவசாயிகள் சாடுகின்றனர்.

எனவே விவசாயத்தை முன்னெடுக்க முறையான திட்டத்தை அரசாங்கம் கையாள வேண்டும் எனவும் விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் கடன் சுமையிலிருந்து பாதுகாக்க உரத்தட்டுப்பாட்டை விலக்க காலம் தாழ்த்தாது நடவடிக்கையை எடுப்பதுடன் விவசாயிகளுக்காக விடுத்த தேர்தல் வாக்குறுதியை காப்பாற்ற முன்வர வேண்டும் எனவும் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வடிவேல் சுரேஷுக்கு...

தொடர்பில் கடந்த காலங்களில் எவ்வாறான கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றதோ அதேநிலைமை இன்று மலையக பிரதேசங்களிலும் உருவாகியுள்ளது.

மறைமுகமான செயற்பாடுகளினால் மலையக மக்களின் காணி உரிமை அபகரிக்கப்படுமோ என்ற சந்தேகம் உருவாகியுள்ளது.

இன்று பெருந்தோட்ட பிரதேசங்களில் கால்நடை அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு பல்லாயிரம் கணக்கான காணிகளை குறிவைத்து குடியிருப்புகளை உருவாக்கி மலையகத்திலுள்ள அமைதியான சூழலை களங்கப்படுத்தி பிரச்சினைக்கு ஆயத்தமாகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அதற்குரிய ஆரம்பக்கட்ட நிகழ்வுகள் கண்டி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதுதொடர்பில் ஆரம்பத்திலேயே எச்சரித்திருந்தோம். சிலர் எமது கருத்துகளை புறந்தள்ளினார்கள். ஆனால், இன்று மௌனமாகிவிட்டார்கள். மலையகத்துக்கான பல்கலைக்கழகம், மாடி வீடுகள், ஆசிய கிராமம் எல்லாம் கேள்விக்குறியாகிவிட்டன. என்னுடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கலாசார மண்டபங்கள் நிதி ஒதுக்கப்பட்டும் கூட அவை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட கம்பனிகளும் அரசாங்கமும் ஒன்றிணைந்து திட்டமிட்டு மலையக மக்களை ஒடுக்குகிறார்கள். பொது மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். இன்று தொழில் பிரச்சினைகள் பொலிஸ் நிலையங்களுக்கு சென்று தீர்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது. தொழிற்சங்கவாதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. எனக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் கொழும்பு, ராஜகிரியவிலுள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் இல்லம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸ் அதிகாரிகளினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிமிடம் வரை சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்கவும் இல்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நவின் திஸாநாயக்க, சாகல ரத்நாயக்க, ருவன் விஜேவர்தன போன்றோர் குண்டர்களோடுவந்து கட்சி அலுவலகத்தை சேதப்படுத்தியிருந்தார்கள். முறைப்பாடு செய்தும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை.

மலையக மக்களுக்காக குரல் கொடுப்பதற்காக எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பதால் என்னுடைய கருத்துரிமையையும் தொழிற்சங்க போராட்டங்களையும் எவராலும் நசுக்க முடியாது என பகிரங்கமாக சவால் விடுக்கிறேன். என்னை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்த மலையக உறவுகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்காவிட்டால் நான் மனிதனே இல்லை. மத்திய வங்கியில் கொள்ளையடித்த கூட்டம் வெட்கி நிற்க வேண்டும். ஆனால் இன்று மலையக மக்களின் வீட்டை கொள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

## மஞ்சள்...

கொள்வனவு செய்வதாகவும் சில்லறை கடைகளில் 100 கிராம் மஞ்சள் 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அந்த இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 20 கிராம் மஞ்சள் 170 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

## கைதிகளை...

கைதிகளின் மறுசீரமைப்பு, போதைப் பொருளிலிருந்து புனர்வாழ்வளித்தல் ஆகியவை எமது கடப்பாடுகளாக உள்ளதுடன் கட்டுப்பாட்டுக்குள் உள்ள சிறைக் கைதிகளின் உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதாகவும் அவை அமைந்துள்ளன. மேலும், கைதிகளுக்கு ஏதும் தவறாக நடத்தப்படுமிடத்து அதனை நாம் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

## பதவி துறந்தார்...

தொலைபேசியூடாக லொஹானை தொடர்பு கொண்டு இவ்வாறு பணித்த பிரதமர், விசாரணைகள் முடியும்வரை லொஹானின் அமைச்சுப் பொறுப்புகள் இடைநிறுத்தப்படவேண்டுமென ஜனாதிபதி கோட்டபாயவையும் கேட்டுக்கொண் டிருந்தார். அதனையடுத்தே லொஹான் தனது அமைச்சுப் பொறுப்பை இராஜிநாமா செய்தார்.

எவ்வாறாயினும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகிக்கும் லொஹான் ரத்வத்தே, இந்த அமைச்சுப் பொறுப்பினை தொடர்ந்தும் தன்வசம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் சம்பவத்திற்கு பொறுப்பேற்று அமைச்சரே பதவி விலகியுள்ள நிலையில், சிறைச்சாலையில் அப்படியான எதுவும் நடக்கவில்லையென ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் குறித்தும் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## அமைச்சரை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓர் அமைச்சர் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் செல்வதை சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்? அதிகாரிகளாக இருந்தாலும் சரி சிறைச்சாலைக்குள் அங்கீகாரம் அளிக்கப்பட்டோரை தவிர அரசியல்வாதிகளோ எந்தவோர் அதிகாரியோ துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதித்தது மிகவும் தவறான விடயமாகும்.

சிறைச்சாலைகள் ஒரு விருந்தினர் விடுதி அல்ல. துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் தனியாக செல்லாது தனது நண்பர்களுடன் சென்றுள்ளார்.

வெறுமனே அநுராதபுரம் மாத்திரமல்ல, வெலிக்கடை சிறைக்கு சென்றதாகவும் அங்கு தமிழ் அரசியல் கைதிகளினை மிரட்டியதாகவும் அவர்களை முழந்தாளிடச் செய்ததாகவும் கூட ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான விடயங்கள் நடப்பதாக இருந்தால் நிச்சயமாக இது மாதிரியான ஒரு மோசமான சம்பவம் இருக்க முடியாது.

ஆகவே, இந்த அமைச்சரின் நடவடிக்கை தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும். இவர் அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்றார்.

## கல்வியை கைவிடும்...

இம்மாணவர்களில் பெரும்பாலானோருக்கு கைபேசி உள்ளிட்ட போதிய தொழில்நுட்ப சாதனங்கள் இல்லாத நிலையில் அவர்கள் நிகழ்நிலையில் கல்வி கற்க முடியாத சூழல் காணப்படுகின்றது. அத்துடன் இவ்வாறு சாதனங்கள் கிடைக்கப்பெற்றாலும் போதிய இணையவசதி கிடைக்காத காரணத்தினால் இச்சாதனங்களை முறையாக பாவிக்க முடியாதுள்ளன.

ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதால் பெரும்பாலான மாணவர்கள் தமது நிகழ்நிலை கல்வியை தொடர முடியாமல் வீடுகளிலேயே முடங்கிப் போய் இருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்கள் இம்மாணவர்களிடம் ஆசை வார்த்தைகளை கூறி அவர்களை தமது தேயிலை தோட்டத்திற்கு தொழிலுக்கு அழைத்து செல்கின்றனர்.

இதேவேளை தொழிற்சாலைகளுக்கும் சில மாணவர்கள் இரவு நேர வேலைக்கு செல்கின்றனர். இதற்கென சில ஒப்பந்தக்காரர்களும் உள்ளதாக கூறப்படுகின்றது. இந்த ஒப்பந்தக்காரர்களும் இதே தோட்டங்களில் வேலை செய்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார சுமை காரணமாக சில தோட்டத் தொழிலாளர்களும் தமது பிள்ளைகள் வேலைக்கு செல்வதனை அனுமதிக்கின்றனர்.

இதனால் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைப்பதனால் சிறு தோட்ட உரிமையாளர்கள் ஆர்வத்துடன் இம்மாணவர்களை தமது தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தி வருகின்றனர்.

தரம் 6 தொடக்கம் 10 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளை சேர்ந்த மாணவர்களே பெரும்பாலும் இவ்வாறு தனியார் தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்கின்றனர். தற்போது நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் தொழில் திணைக்கள அதிகாரிகள் யாரும் ஸ்தலத்திற்கு வர மாட்டார்கள் என்ற காரணத்தினால் மாணவர்களை வேலைக்கு அமர்த்தும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலை தொடரும் பட்சத்தில் இம்மாவட்டத்தில் எதிர்காலத்தில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரிக்கும் அபாய நிலை தோன்றுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சுகாதாரப் பரிசோதகர்...

வழங்கப்படுவதில்லை என்றும் இந்த சம்பவம் தொடர்பில் பூரண விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (15) விளக்கமளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கெகிராவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (14) அந்த பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மூன்று பிக்குகளினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு, தாக்குதலுக்குள்ளான பொதுச் சுகாதார பரிசோதகர் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் கெகிராவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்துக்குள்ளோ அல்லது அந்த காரியாலயத்தை அண்மித்த இடங்களிலோ இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கப்படவில்லை. இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிக்குகள் தமக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியை வழங்குமாறு கோரியுள்ளனர். ஆனால், அவ்வாறு மூவருக்கு மாத்திரம் தடுப்பூசி வழங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. இதுதொடர்பில் போதிய தெளிவில்லாமல் பிக்குகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவர் தான் அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக கடமையாற்றுவதாகவும் தெரிவித்துள்ளார். கொரோனா தடுப்பூசி வழங்கும்போது அரசியல் தொடர்பில் நாங்கள் கவனத்தில் கொள்வதில்லை. நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் தடுப்பூசி வழங்க வேண்டியதே எங்களுக்குள்ள முக்கிய தேவையாகும். அதுவே, எங்களின் கடமையுமாகும்.

இந்த சம்பவம் தொடர்பில் கெகிராவ பொலிஸாரினால் பூரண விசாரணை முன்னெடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவர் தான் பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் என்று குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பிலும் பூரண விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 16.09.2021 வியாழக்கிழமை – ஆவணி 31

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: உத்தராடம்**
அதிகாலை 4.56 - 17.09.2021
அதிகாலை 4.08 வரை

**யோகம்: சோபனம்**
அதிகாலை 12.53 - இரவு 10.31 வரை

**அதிகண்டம்**
இரவு 10.31 - 17.09.2021
இரவு 8.21 வரை

**திதி: பூர்வ பட்ச தசமி**
காலை 9.36 வரை

**பூர்வ பட்ச ஏகாதசி**
காலை 9.36 - 17.09.2021
காலை 8.08 வரை

**முற்கரணம்: கரஜம்**
காலை 9.36 வரை

**பிற்கரணம்: வணிஜம்**
காலை 9.36 - இரவு 8.50 வரை

**சுப நேரங்கள்**
காலை 10.53 - பி.ப. 12.05

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 1.37 - 3.09

**குளிகை காலம்**
காலை 9.05 - 10.36

**எமகண்ட காலம்**
காலை 6.04 - 7.35

**துர் முகூர்த்தம்**
காலை 10.04 - 10.52
பிற்பகல் 2.55 - 3.44

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேடம்**
தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். புதிய துவக்கங்கள் உருவாகலாம். கடினமான பணியும் எளிமையாக நிறைவேறும். ஆளுமை திறன் மேம்படும்.

**ரிஷபம்**
பணநிலை சீராகும். வேலைத்தளங்களில் புதிய நிலைமை ஏற்படலாம். வீட்டின் வயது முதிர்ந்தவர்களுடன் அன்பாக இருந்து நல்லாசிகளை பெறலாம். கல்வியில் மேன்மை உண்டாகும்.

**மிதுனம்**
நிதி நிலையால் சில வேலைகளில் தாமதம் ஏற்படலாம். சுயநல மனிதர்களின் நட்பில் விலகுவது மேன்மை. மனஅழுத்தம் மற்றும் வாழ்க்கைத்துணையின் மனகசப்பு நீங்க இறைவணக்கம் தேவைப்படலாம்.
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 3/4இற்கு காலை 10.43 - இரவு 10.19
திருவாதிரை நட்சத்திரத்திற்கு இரவு 10.19 - 17.09.2021 இரவு 9.43 வரை

**கடகம்**
வருவாய்க்கான புதிய நிலைமை ஏற்படலாம். இல்லத்தில் சுப நிகழ்வு உண்டாகலாம். வீட்டிற்கான திருத்த வேலைகள் இடம் பெறலாம்.

**சிம்மம்**
வணிகத்தில் இலாப அதிகரிப்புகள் உண்டாகலாம். பணியில் இருப்பவர்களின் தன்னம்பிக்கையால் வேலைகளில் திறமை மேம்படும். அரசாங்கப் பணிகளில் இருப்பவர்களுக்கு புகழ் மற்றும் மதிப்பு உண்டாகலாம்.

**கன்னி**
வேலைத்தளங்களில் பணியின் நிலையை உயர்த்துவதில் கவனம் தேவைப்படலாம். பிள்ளைகளிடம் விருப்பங்களில் நல்ல முடிவை தெரிவுசெய்வது நன்மை. இல்லறம் தவிர்ந்த விடயங்களில் ஒதுங்கியிருப்பது நன்மை.

**துலாம்**
இல்லத்தின் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிகளில் சிறப்பு உண்டாகலாம். பிறரின் விடயங்களிலிருந்து ஒதுங்கியிருப்பது நன்மை. பணியிடங்களில் உங்கள் மீதான நம்பிக்கை அதிகரிப்பால் சில பொறாமைகளும் உண்டாகலாம்.

**விருச்சிகம்**
பெற்றோருக்கு மகிழ்ச்சி உண்டாகும். ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு நன்மை அதிகரிக்கும். வணிகத்தில் புதிய நல்ல நிலை தோன்றும். தம்பதியரிடையே நல்லிணக்கம் நிலவும்.

**தனுசு**
பரம்பரை சொத்துகள் விடயங்களில் சில பிரச்சினைகள் உண்டாகலாம். மனதில் சில சங்கடங்கள் இருக்கலாம். காலில் வலி அல்லது உடல் அயர்வு உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை தரும்.

**மகரம்**
பணிகளை தேடுவோருக்கு சாதகமான நிலை உண்டாகலாம். வாழ்க்கைத்துணையின் பிறந்த இல்லத்தில் மங்கள நிகழ்வுகள் உண்டாகலாம். புதிய திருமண தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும்.

**கும்பம்**
பணியிடங்களில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். வேதனையான கடந்தகால நிகழ்வுக்கு ஒப்பான நேரங்கள் மீண்டும் நிகழாதிருக்க, இறைவனை தொழுவது நம்பிக்கை மற்றும் நன்மையை கிடைக்க செய்யலாம்

**மீனம்**
வியாபார வளர்ச்சி மகிழ்ச்சி தரும். சுப நிகழ்வுக்கான செலவுகள் ஏற்படலாம். உடல்நலம் சீராகும். பணிகளும் நல்ல முறையில் நிறைவேறும்.

# ஒலுவில் துறைமுகத்தை மீள இயங்கவைக்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன கண்காணிப்பு விஜயம்




(அட்டாளைச்சேனை நிருபர்)

ஒலுவில் துறைமுகத்திலுள்ள குறைபாடுகளைக் கண்டறியும் முகமாகவும் குறித்த துறைமுகத்தை மீள இயங்க வைக்கவும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது ஒலுவில் துறைமுகத்தில் மண் மூடப்பட்ட பகுதிகளை இராஜாங்க அமைச்சர் பார்வையிட்ட பின்னர், ஒலுவில் துறைமுக அதிகாரிகள் மற்றும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இது விடயமாக கலந்துரையாடினார்.

ஒலுவில் துறைமுகத்தை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மீனவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆனால், ஒலுவில் பிரதேசத்தின் கடலரிப்பு விடயத்தை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான வேலைகளை செய்யவேண்டும்.

ஆகவே, இப்பிரதேச மக்களின் தேவையை நிவர்த்திசெய்வதோடு, துறைமுகத்தில் மூடப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

இதன்பின்னர் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பின்பகுதி கடலரிப்பு காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கடலரிப்பினை தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டங்களையும் இராஜாங்க அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களான அறுகம்பை, ஒலுவில், நிந்தவூர், காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களில் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி அமைச்சினால் தற்போது பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்ட வேலைகளை இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா மற்றும் அதிகாரிகளுடன் நேரடியாக சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா நோயாளர்களுக்கு கரும்பூஞ்சை தொற்று இல்லை

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

நாட்டில் கரும்பூஞ்சையுடன் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டாலும் கொரோனா நோயாளர்களுக்கு இதுவரையில் கரும்பூஞ்சை தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகவில்லையென விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் ஒருசில வரையறைகளுடன் தளர்த்துவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தரவுகளின் அடிப்படையிலும் சாதகமான ஒரு தன்மையை நோக்கியே பயணித்துக் கொண்டுள்ளோம். ஆனாலும், நூறு வீதம் எம்மால் திருப்தியடைய முடியாது.

கரும்பூஞ்சை தொற்றுடன் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டாலும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் கரும்பூஞ்சை தொற்றுடன் இதவரை யில் அடையாளங்காணப்படவில்லை. ஒருசில நோயாளர்கள் கரும்பூஞ்சை தொற்றுடன் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,94,109 | 55,288 | 4,27,254 | 2,475 | 11,567 |

# ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் இதுவரை 2850 உடல்கள் அடக்கம்

## பிரதேச சபை தவிசாளர் நௌவ்பர் தகவல்



(கனகராசா சரவணன்)

ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் 2850 உடல்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக நேற்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌவ்பர் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மஜ்மா நகர் சூடுபத்தினசேனை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இதனை எமது சபை பெறுப்பேற்று மனிதவலு இயந்திரவலு என்பவற்றை பயன்படுத்தி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு இராணுவத்தினர், சுகாதாரப் பணியாளர்கள் ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர்.

# இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய உக்ரைனுக்கு உத்தியோகபூர்வ விஜயம்




இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பிரசாரத்தில் பங்கேற்பதற்காகவும், இரு நாடுகளுக்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவும், பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய கடந்த 08ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை உக்ரைனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஊடக மற்றும் சுற்றுப்பயண இயக்குநர் வலையமைப்பு அமர்வொன்றில் இராஜாங்க அமைச்சர் பங்கேற்றார். இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த நிகழ்வு, உக்ரைனிலுள்ள முன்னணி ஊடகங்கள் மற்றும் பயண அமைப்புகளின் பிரதிநிதிகளை ஈர்த்ததுடன், இலங்கையின் சுற்றுலா இடங்களை - குறிப்பாக, அபிவிருத்தியடைந்துவரும் காட்சித் தலங்களையும், உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கவேண்டிய பயண அனுபவங்களையும் முன்னிலைப் படுத்துவதற்கான ஒரு முக்கிய வாய்ப்பை வழங்கியது.

உக்ரைனின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் டிம்ட்ரோ சேனிக், பொருளாதார அபிவிருத்தி, வர்த்தகம் மற்றும் விவசாயப் பிரதி அமைச்சர் தாராஸ் கச்கா மற்றும் உக்ரைன் வர்த்தக மற்றும் தொழில் சங்கத்தின் தலைவர் ஜென்னடி சைகிகோவ் மற்றும் சபை உறுப்பினர்களைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, குறிப்பாக விவசாயம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினார்.

இந்த விஜயத்தின்போது, உக்ரைனுக்கான இலங்கைத் தூதுவர் ரிஸ்வி ஹசன், பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாவித்திரி பானபொக்க மற்றும் இராஜாங்க அமைச்சரின் ஊடக செயலாளர் தெஷான் கோனவெல ஆகியோர் இராஜாங்க அமைச்சருடன் இணைந்திருந்தனர்.

# அச்சுவேலியில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் அட்டகாசம்

அச்சுவேலி மேற்கு , ஜோன்ராஜா வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் 11 மணியளவில் நுழைந்த மூவரடங்கிய இனந்தெரியாத குழுவொன்று வீட்டின் மீது தாக்குதல் மேற் கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தபோதிலும் அதுதொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதன்பின்னர் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர். .

வீட்டின் பாதுகாப்புச் சுவர், ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் கதவுகள் என்பவற்றின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன், அவற்றை சேதப்படுத்தி, வீட்டிலுள்ளவர்களையும் மிரட்டியுள்ளனர். இந்தத் தாக்குதலால் சுமார் ஒரு இலட்ச ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த தினத்தன்று இரவே அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் முறையிட்டுள்ளபோதும் நேற்று காலை 10 மணிவரையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வீடு, அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, செப்டெம்பர் 16ஆம் திகதி, வியாழக்கிழமை**

# அமைச்சரின் அராஜகம்!

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முழந்தாளில் இருக்கச்செய்துள்ளதுடன், தனது துப்பாக்கியை காண்பித்து அவர்களை கொலை செய்துவிடுவேன் என மிரட்டியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற இந்த இராஜாங்க அமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து அவர்களில் இருவரை முழந்தாளில் இருக்கச் செய்துள்ளார். பின்னர் அவர் தமிழ் அரசியல் கைதிகளை தனித்தனியாக அழைத்து துப்பாக்கிமுனையில் விசாரித்துள்ளார். அப்படி விசாரிக்கும்போது கைதியொருவர் கூறிய தகவலால் ஆத்திரமடைந்த அமைச்சர், அவரை துப்பாக்கிமுனையில் நிறுத்தி, கொன்றுவிடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் உலகின் மிகவும் பயங்கரமான சட்டங்களில் ஒன்றான பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடும் அதிர்ச்சியில் உள்ளனர். பல வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள், ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நலன்களை கவனிக்கவேண்டிய அமைச்சர், அவர்களை கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளமை அவர்களது நிலையை மேலும் மோசமாக்கியிருக்கிறது.

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, இலங்கையின் ஒரு அமைச்சர் இதுபோன்ற மிக மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதென்பது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை இலங்கை அரசாங்கம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை ஒரு பொருட்டாகக் கருதாத இலங்கையை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் வைத்திருப்பது அர்த்தமற்றது என்று இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கஜேந்திரகுமார் எம்.பி, அதற்கப்பால் குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை கொண்டுசெல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல, அநுராதபுரம் சிறைச்சாலையில் இழிவான சட்டவிரோதமான நடவடிக்கையில் ஈடுபட்ட அமைச்சரை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

ஒரு இராஜாங்க அமைச்சர் அநுராதபுர சிறைக்குச் சென்று, துப்பாக்கிமுனையில் தமிழ் கைதிகளை முழந்தாளிடச் செய்து அவமானப்படுத்தி, பயமுறுத்தியுள்ளார். இது ஒரு பாரிய மனித உரிமை மீறல், மனிதர்களின் ஆத்ம கௌரவத்தை அவமானப்படுத்தும் ஒரு செயல், ஒரு கிரிமினல் செயல். பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசாங்கத்தின் மிக வக்கிரமான இனவாத மனசை இது காட்டுகிறதா? ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ இதற்கு பதில் கூறவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, அமைச்சர் பதவி விலக கேட்டுள்ளது. எப்படியோ நேற்று பிற்பகல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் லொஹான் ரத்வத்தே. இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிய அவர், இந்த இராஜினாமாவை பரிசீலிக்குமாறு கோரியிருந்தார். எப்படியோ ஜனாதிபதி இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியில் அரசாங்க அமைச்சரின் இழிவான மற்றும் சட்டவிரோதமான இந்த நடத்தை வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. இந்தக் கேவலமான சட்டவிரோத செயல் நாட்டின் அராஜக நிலைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதில் இந்த அரசுக்கு கடப்பாடு உள்ளது. ஆனால், அதனையெல்லாம் புறந்தள்ளி இப்படி இந்த சட்டவிரோதமான மற்றும் கேவலமான செயல் நடந்திருப்பது நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு இந்தளவு அதிகாரம் இருக்கிறதா? கைதிகளை துப்பாக்கிமுனையில் விசாரிக்க அமைச்சருக்கு அதிகாரம் இருக்குமாயின், நாட்டில் சட்டம், நீதியெல்லாம் என்ன மண்ணாங்கட்டிக்கு என்று கேட்கத் தோன்றுகிறது. கடந்த காலங்களில் நீதிமன்றங்களால் பல்வேறு சம்பவங்களுக்காக விசாரிக்கப்பட்ட ஒருவரை இராஜாங்க அமைச்சராக அரசு நியமித்ததே முதற் தவறு. இனியும் இந்த தவறை அரசு செய்துவிடக்கூடாது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி பொதுத் தேர்தலின்போது, கண்டி உடத்தலவின்ன பிரதேசத்தில் வானில் பயணித்த 10 முஸ்லிம் வாலிபர்களை சுட்டுக் கொன்றமை மற்றும் பலரைக் காயப்படுத்தியமை, கொலைக்குத் திட்டமிட்டமை, அதற்கு ஆதரவளித்தமை, கள்ள வாக்குப் பதிவு, வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்காளர் அட்டைகளை அபகரித்தமை உட்பட 72 குற்றங்கள் தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, அவரின் இரு புதல்வர்களான லொஹான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை உட்பட 15 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அனுருத்த ரத்வத்தை உள்ளிட்ட 7 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 1997ஆம் ஆண்டு பப்புவா நியூகினி நாட்டின் றக்பி வீரர் ஜொயேல் பெரேரா கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டமை, 2001ஆம் ஆண்டு உடத்தலவின்னயில் 10 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டமை, கடந்த வருடம் ஹந்தானையில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் போன்ற விவகாரங்களால் சர்ச்சைக்குள்ளான ஒருவரை சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சராக நியமித்ததே அடிப்படை தவறு. இந்தச் சம்பவங்களின் குற்றவாளிகள் இன்னமும் சிறைவாசம் அனுபவித்துவரும் நிலையில், அவற்றின் சந்தேகநபராக இருந்த ஒருவர் அமைச்சராக இருந்தமை தார்மீகமானதா?

அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் இலேசான அல்லது சாதாரணமாக கடந்துசெல்ல விட்டுவிட முடியாத சம்பவமாகும். இந்தச் சம்பவம் குறித்து நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அதுவரை நீதியான விசாரணைக்காக அதற்கு இடமளித்து லொஹானுக்கு புதிய அமைச்சுப் பொறுப்புகள் எதுவும் வழங்கப்படக்கூடாது.

இதே இராஜாங்க அமைச்சர் சில தினங்களுக்கு முன்னர் வெலிக்கடை சிறைச்சாலையில் வெறியாட்டம் நடத்தியிருக்கிறார். அதற்குப் பின்னரே அநுராதபுரம் சம்பவம் அரங்கேறியிருக்கிறது. இதனை அப்படியே விட்டிருந்தால் இன்னும் சில காலத்தில் நீதித்துறையை மீறி, மரணதண்டனையை தானே விதித்து தானே மரணதண்டனையை நிறைவேற்றவும் செய்திருப்பார் இந்த அமைச்சர். அதற்கு கட்டியம் கூறும் வகையிலேயே இந்த முன்கூட்டிய செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழ் அரசியல் கைதியை போட்டுத்தள்ளினால் பொதுமன்னிப்பில் வெளியே வந்துவிடலாமென்ற ஆசை அவருக்குள்ளும் இருந்திருக்காதா என்ன?

நீதியான ஆட்சியை தருவோம், நல்லாட்சி நடத்துவோமென்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இந்த விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள், என்னவகையான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறார்கள் என்று ஸ்ரீமான் பொதுசனம் பார்த்துக்கொண்டிருக்கிறது. அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததென்பது இதற்குத் தீர்வல்ல. அது பாதிக்கப்பட்டோருக்கு நீதியையும் தராது. இது தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளியாக கருதப்பட்டால் லொஹான் கைதுசெய்யப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். சுயாதீன விசாரணைக் குழுவொன்று இதற்காக நியமிக்கப்படவேண்டும். ஜனநாயகத்தின் மீதான அற்பசொற்ப நம்பிக்கையில் மக்கள் இன்னும் இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில் அரசு இருக்கிறதா என்று மட்டும்தான் பார்க்கவேண்டியுள்ளது.

# அணையா பெருநெருப்பு அண்ணா!



அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த 1969ஆம் ஆண்டு. அப்போது சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி, அண்ணா தலைமையிலான தி.மு.க. அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தது.

பேரவையில் அது தாக்கல் செய்யப்பட்டு அதன் மீது காரசார விவாதம் நடைபெற்றது. முடிவில் தீர்மானத்துக்கு பதிலளிக்க அண்ணா எழுந்தார். அவர் என்ன பேசுவார், தனது ஆட்சியின் சாதனைகளை விளக்கிக் கூறுவாரா அல்லது காங்கிரஸ் கட்சியைக் கடுமையாக விமர்சிப்பாரா என்பதை அறிந்துகொள்ள பேரவையே அவரது உதட்டசைவை உற்றுநோக்கிக் காத்திருந்தது.

அப்போது எழுந்த அண்ணா இப்படிச் சொன்னார், ‘‘காங்கிரஸார் என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். இதற்கு நான் ஒன்றும் விளக்கமளிக்கப் போவதில்லை. ஏனென்றால், அவர்களுக்கு எப்போது என் மீது நம்பிக்கை இருந்தது இப்போது இல்லாமல் போவதற்கு’’ என்றார். அனலாய் தகித்துக்கொண்டிருந்த பேரவை, பெரும் சிரிப்பொலியால் நிரம்பிப்போனது.

அன்றைக்கு சட்டப்பேரவையில் அண்ணாவை காங்கிரஸ் நம்பவில்லை. ஆனால், மக்கள் மன்றத்தில் அண்ணாவைத்தான் பெருவாரியானோர் நம்பினார்கள்.

தமிழக அரசியல் வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய தன்னிகரற்ற தலைவர் அறிஞர் அண்ணா. தனது வாழ்நாள் முழுவதும் அவர் கடந்துவந்த நெருப்பு வளையங்கள் எண்ணிலடங்காதவை.

அதனால்தான் அவர் மறைந்தபோது ஆங்கில நாளேடான ‘தி மெயில்’, ‘அரசியலில் ஓய்வறியாது வீசிய புயல் ஓய்ந்துவிட்டது’ எனத் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது.

எத்தகைய சிக்கலான விவாதமாக இருந்தாலும், அதனை தனக்கே உரிய பாணியில் தவிடுபொடியாக்குவதில் அண்ணாவுக்கு நிகர் இன்னார் எனக் காட்ட இன்றுவரை எவருமில்லை. பல்கலைக்கழகமொன்றில் பேச வந்த அண்ணாவுக்கு கொடுக்கப் பட்ட தலைப்பு ‘முரண்பாடு’. சரித்திரம்முதல் சமகாலம்வரை பல்வேறு மேற்கோள்களைக் காட்டி அண்ணா பேசப் போகிறார் என எதிர்பார்த்தபோது, ‘‘முரண்பாடு என்ற தலைப்பில் பேச வந்திருக்கும் நானே முரண்பாட்டின் முழு வடிவம்தான்’’ என்று தன்னையே உதாரணமாக்கி பேசத் தொடங்கிய சொல்வல்லன் அவர்.



சுதந்திரப் போராட்டம் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய செல்வாக்குடன் இருந்தது. நீதிக்கட்சியோ பணக்காரர்களின் கைகளில் பலமிழந்திருந்தது. அதனை பாமரர்களின் கட்சியாக மாற்ற முனைந்தார் அண்ணா. பிராமணர்களுக்கு எதிரான இயக்கம் என்றால் அது எதிர்மறை அணுகுமுறை என உணர்ந்த அவர், நேர்மறை சிந்தனையுடன் நீதிக்கட்சியை ‘திராவிடர் கழக’மாக 1944இல் சேலம் மாநாட்டில் பெரியாருடன் கரம்கோத்து மாற்றியமைத்தார்.

நாடு விடுதலையடைந்தபோது அதனை துக்க நாளாக பெரியார் அறிவித்தார். ஆனால், அதனை மறுதலித்த அண்ணா, அரசியல் வரலாற்றில் சுதந்திர நாள் ஒரு மைல்கல் என்பதை உணர்ந்து அதனை வரவேற்று நீண்டதொரு அறிக்கையை விடுத்தார்.

பெரியாரின் பார்வை சமூக சீர்த்திருத்தத்தை மையமாகக்கொண்டது. அண்ணாவின் பார்வையோ அரசியலை அடிப்படையாகக்கொண்டது. மக்களை மடை மாற்றித் திருத்துவது சமூக சீர்த்திருத்தம். அதே மக்களின் எண்ணங்களையும், நலனையும் நிறைவேற்றுவது அரசியல் சீர்த்திருத்தம். இந்தக் கருத்து வேறுபாட்டின் காரணமாகவே 1949ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா ஆரம்பிக்க நேர்ந்தது.

அப்போதும் கூட ‘திராவிடர் முன்னேற்றக் கழகம்’ என்று அண்ணா பெயர் சூட்டவில்லை. மாறாக ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்றே கட்சிக்கு பெயர் வைத்தார். அன்றைய சென்னை ராஜதானியில் ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகள் இணைந்திருந்தன. அதுவே திராவிட நாடாக அறியப்பட்டது. அந்தப் பகுதிகள் அனைத்தின் நலன் காக்கும் கட்சியாகவே அண்ணாவால் தி.மு.க. தொடங்கப்பட்டது.

திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்து அவர் அரசியலை முன்னெடுத்தபோது பிரிவினைவாத தடுப்புச்சட்டம் அப்போது பெரும் சோதனையைத் தந்தது. சொல்லப்போனால், மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட அச்சட்டம் தி.மு.கவுக்கு முழுமையாக எதிராக அமைந்தது.

அப்போது சாதுரியமாக செயற்பட்ட அண்ணா, ‘இந்தியாவுக்குள் திராவிடம்’ என்று தங்களது இலக்கை அடைப்புக்குறிக்குள் கொண்டுவந்து இலகுவாக கட்சியை காப்பாற்றினார்.

மலைபோல் வந்த பிரச்சினைகள் அனைத்தையும் பனிபோல் விலக்கியவர் அண்ணா.

அதுபோலவே 1967இல் அவர் ஆட்சியைக் கைப்பற்றிய விதமும் அனைவராலும் கூர்ந்து நோக்கப்படக்கூடிய ஒன்றாக இருந்தது. முழுக்க முழுக்க வலதுசாரி சித்தாந்தம் கொண்ட சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ராஜாஜியையும், முழுக்க முழுக்க இடதுசாரி சித்தாந்தம் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராமமூர்த்தியையும் கூட்டணியில் சேர்த்துக்கொண்டு ஆட்சியை பிடித்தார் அறிஞர் அண்ணா.

அப்போது பிரபலமாக இருந்த ஆங்கில வார இதழ் ஒன்று அண்ணாவின் அரசியல் ஆளுமையைப் பார்த்து, ‘பிராமணா’ எதிர்ப்பு இயக்கமாக விளங்கிவரும் தி.மு.கவை, இரு பிராமணர்களுடன் (ராஜாஜி, ராமமூர்த்தி) கைகோர்த்து அரியணையில் ஏற்றியிருக்கும் அண்ணாவின் ராஜதந்திரம் பிரமிக்கத்தக்கது’ என்று குறிப்பிட்டிருந்தது. அண்ணாவின் சாதனை எழுச்சியால் சரிந்த காங்கிரஸ் கட்சிக்கு இன்றுவரை தமிழகத்தில் தனித்துவம் இல்லை என்பதிலிருந்தே அவரது அரசியல் ஆளுமையை உணரலாம்.

ஹிந்தி ஆதிக்கத்தை இறுதி மூச்சுவரை எதிர்த்தவர் அண்ணா. மக்களின் சமவாய்ப்பை ஹிந்தி பறிக்கிறது என்பதே அதற்குக் காரணம். ஆங்கிலம், ஆட்சி மொழி என்றால் தங்களது தாய்மொழியுடன் ஆங்கிலம் கற்றால் போதுமானது. அதுவே ஹிந்தி ஆட்சி மொழி என்றால், ஹிந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் வேறு எந்த மொழியும் கற்கத் தேவையில்லை. மாறாக தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பிற மொழியினர் ஹிந்தியையும் கட்டாயம் கற்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஜனநாயகத்தில் அனைவரும் சமம் என்ற கொள்கைக்கு நேர் முரணாக இது இருந்ததன் காரணமாகவே ஹிந்தித் திணிப்பை அண்ணா எதிர்த்தார். அதே அடிப்படையில்தான் பெரியார்முதல் ராஜாஜிவரை அனைத்து தலைவர்களும் ‘ஆங்கிலம் ஒன்றுபடுத்தும், ஹிந்தி பிளவுபடுத்தும்’ என்று அன்றைக்கு முழங்கினர்.

இந்திய மொழியை விடுத்து ஆங்கிலத்தை ஏன் பொது மொழியாக ஏற்கவேண்டும் எனக் கேட்கலாம். சமகாலத்திலேயே அதற்கு சான்றளிக்க வேண்டுமானால், ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகியபோதும், ஆங்கிலத்தை விலக்க முடியவில்லை. ஐரோப்பிய யூனியனின் பொதுமொழியாகவே ஆங்கிலம் நீடிக்கிறது. எனவே, ஆங்கிலம் ஆங்கிலேயர்களின் மொழி மட்டுமல்ல, உலகப் பொது மொழி என்பதை உணர வேண்டும்.

அதனால்தான் தமிழும், ஆங்கிலமும் போதும் என்று முடிவெடுத்து இரு மொழிக் கொள்கையை தமிழகத்தில் அண்ணா நிறைவேற்றினார். இந்த முடிவு அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்குக்கூட பிடிக்கவில்லை. இதை முன்னிறுத்தி தமிழகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என அவர் யோசித்தபோது, கல்வி மாநிலப் பட்டியலில் இருந்ததால் எந்த நடவடிக்கையையும் அவரால் எடுக்க முடியவில்லை.

அதன் பின்னர், 1975இல் நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டபோது கல்வியை பொதுப் பட்டியலுக்கு மாற்றினார் இந்திரா காந்தி. ஆனால், இதில் வேடிக்கை என்னவெனில், நெருக்கடி நிலைக்கு எதிராகப் போராடி, அடுத்து வந்த தேர்தலில் இந்திராவை வீழ்த்திய ஜனதா கட்சி, நெருக்கடி நிலை பிரகடனம் தொடர்பான சட்டங்களை இரத்துச்செய்ததே தவிர, கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவரவில்லை.

காங்கிரஸ் மற்றும் ஜனதா கட்சியின் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரான இந்தச் செயற்பாடுதான் இன்றைக்கு நீட் தேர்வுவரை எதிரொலித்து எத்தனையோ சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் கூடுதல் அதிகாரம் வழங்கவேண்டும் என்பது அண்ணாவின் திடமான கோரிக்கை. குஜராத்தில் வணிகர்கள் அதிகம்; மேற்கு வங்கத்தில் உழைப்பாளிகள் அதிகம். இப்படியாக ஒவ்வொரு மாநிலத்துக்கும் உள்ள தனித்தன்மையை உணர்ந்து அவர்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்றே அண்ணா விரும்பினார்.

தாம் இறந்து விடுவோம் என்று அறிஞர் அண்ணா உணர்ந்த பிறகு தம்பிகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். 1969 ஜனவரி 12ஆம் திகதி எழுதிய அக்கடிதம்தான் அண்ணாவின் இறுதி எழுத்து. சொல்லப்போனால், அதை அவரது மரண சாசனம் என்றே கூறலாம். அதில் அவர் இப்படி குறிப்பிடுகிறார்:

‘பொருளாதார வளர்ச்சியின் பயன் சமூகம் முழுமைக்கும் கிடைத்திட, தக்க முறை கண்டாக வேண்டும்; வெள்ளம் அழித்திடும் – வாய்க்கால் வளமூட்டும்; செல்வம் சிலரிடத்தில் மட்டும் குவிந்திருப்பது என்பது வெள்ளத்துக்கு ஒப்பானது; அது கொண்டவனையும் சரி, சமூகத்தில் வலிவற்றோரையும் சரி அழித்துவிடும்; ‘பணம் பெட்டியில் தூங்குகிறது; பணக்காரன் பட்டு மெத்தையில் தூங்குகிறான்; ஆண்டவன் சொர்க்கத்தில் தூங்குகிறான்; இல்லாவிடில் தெருவில் ஏன் இத்தனை பிச்சைக்காரர்கள்’ என்று மொரோவியோ நாட்டில் ஒரு பழமொழி உண்டு. அதுதான் நிதர்சனம். காலத்தை வீணாக்காமல் நாடு வளம் பெற, சமூகம் சீர் பெற, சமதர்மம் மலர்ந்திட பாடுபடுவதற்கான உறுதியினை மேற்கொள்வோம்’ என்று எழுதியிருக்கிறார்.

சாவு நெருங்கும் தறுவாயிலும் கூட சமூகம் தழைக்க வேண்டும் எனப் போராடிய அண்ணாவின் அக்கடிதம் தம்பிகளுக்கானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த தரணிக்கானது!

**பண்ருட்டி இராமச்சந்திரன்**
**தமிழக முன்னாள் அமைச்சர்**

# ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் தடுப்பூசி அட்டையின்றி பதுளை மாவட்டத்துக்குள் நுழைய முடியாது

## சோதனைச்சாவடிகளில் எழுமாற்று அன்ரிஜன் பரிசோதனையை கடுமையாக்க நடவடிக்கை

## 20 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசிகளை விரைவுபடுத்தவும் தீர்மானம்



நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு தளர்த்தப்பட்டதன் பின்னர் பதுளை மாவட்டத்துக்கு வருபவர்களுக்கு சோதனைச்சாவடிகளில் எழுமாற்று அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளவும் சுற்றுலாப் பயணம் வருபவர்கள் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டியதை கட்டாயமாக்கவும் பதுளை மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் நிலவும் கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் மாவட்ட செயலாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

நாட்டில் அமுலிலுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்ததுடன், இதுதொடர்பில் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப் பட்டன.

மாவட்டத்தினுள் பணிபுரியும் அரச அதிகாரிகளுக்கு இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கப் பட்டிருப்பதால், எதிர்காலத்தில் அலுவலக சேவைக்கு வரும்போது தடுப்பூசி பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துவதை கட்டாயமாக்கல், மாவட்டத்தினுள் 30-60 வயது மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நிறைவுப் பகுதியை எட்டியுள்ளதால், அரச அலுவலகங்களுக்குச் சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் குறிப்பிட்ட வயதினர் தடுப்பூசி பெற்றிருப்பதைக் கட்டாயமாக்கல், பதுளை மாவட்டத்துக்கு சுற்றுலா வருபவர்கள் கொரோனா தடுப்பூசி பெற்றிருப்பதைக் கட்டாய மாக்கல், பதுளை மாவட்டத்துக்கு வரும் நபர்களுக்கு வீதித் தடுப்புகளில் எழுமாறாக அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளல். 20-30 வயதினருக்குத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தல் உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.

அதேவேளை, பதுளை மாவட்டத்தில் 30-60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதுவரை கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொள்ளவில்லையெனில் அவர்களுக்கு விரைவாக தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், அதற்கான ஏற்பாடுகளைச் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டுள்ளதாகவும் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



விசேடமாக தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்குத் தடுப்பூசி மத்திய நிலையங்களுக்கு வருவதில் அசௌகரிய நிலை இருப்பின், தமது கிராமசேவகர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் காரியாலயத்தைத் தொடர்புகொண்டு தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை முன்னெடுக்குமாறும் அறிவிக்கப்பட்டது.

மேலும், இடைநிலை கொரோனா சிகிச்சை நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், தேவையானளவு ஒட்சிசன் கையிருப்பில் உள்ளனவா என்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

தற்பொழுது பதுளை மாவட்டத்தில் நோயாளர்களுக்கான கட்டில்கள் மற்றும் ஒட்சிசன் போதுமானளவு காணப் படுவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மேஜர் சுதர்ஷன தேனிபிட்டிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, அரவிந்த் குமார் உள்ளிட்ட மாவட்ட அரசியல் பிரதானிகள், பதுளை மாவட்ட செயலாளர் தமயந்தி பரணகம, ஆளுநரின் செயலாளர் எம்.எம். விஜயநாயக்க, பிரதேச செயலாளர்கள், சுகாதாரப் பிரிவு அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன், இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் குழுவினர் சூம் தொழில்நுட்பத்தினூடாக பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 778 பேருக்கு தொற்று உறுதி: 455 பேர் மரணம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 12ஆயிரத்து 778 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் கடந்த 24 மணித்தியாலத்தில் 26 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட கொரோனா தொற்று தொடர்பாக நேற்று முன்தினம் மாலை வெளியான அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரில் 455 பேர் மரணமடைந்துள்ளனர். மேலும் 8 ஆயிரத்து 287 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. கடந்த 24 மணித்தியாலத்தில் 26 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் 45 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அம்பகமுவ பகுதியில் 2 ஆயிரத்து 314 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் ஆயிரத்து 365 குடும்பங்களும் ஹங்குரங்கெத்த பகுதியில் ஆயிரத்து 216 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் ஆயிரத்து 403 குடும்பங்களும் நுவரெலியாவில் ஆயிரத்து 989 குடும்பங்களுமாக மொத்தமாக 8 ஆயிரத்து 287 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் அம்பகமுவ பகுதியில் 2 ஆயிரத்து 46 பேரும் பொகவந்தலாவ பகுதியில் ஆயிரத்து 184 பேரும் ஹங்குரங்கெத்த பகுதியில் 601 பேரும் கொட்டகலை பகுதியில் 918 பேரும் கொத்மலையில் ஆயிரத்து 32 பேரும் லிந்துலையில் ஆயிரத்து 109 பேரும் மஸ்கெலியாவில் 794 பேரும் மதுரட்ட பகுதியில் 249 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 686 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் ஆயிரத்து 18 பேரும் நுவரெலியாவில் ஆயிரத்து 640 பேரும் இராகலையில் 789 பேரும் வலப்பனை பகுதியில் 712 பேருமாக மொத்தமாக 12 ஆயிரத்து 778 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் அம்பகமுவ பிரதேசத்திலேயே தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இப்பிரதேசத்திலேயே அதிகமாக 140 பேர் உயிரிழந்துமுள்ளனர்.

இது தவிர, நுவரெலியா பகுதியில் 139 பேரும் வலப்பனை பகுதியில் 64 பேரும் கொத்மலையில் 68 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 44 பேருமாக மொத்தமாக 455 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் அதாவது, இந்த அறிக்கை வெளியான (14.09.2021) அன்று மாலை 4 மணிவரை நுவரெலியா பகுதியிலேயே அதிகமான தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 09 பேர் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைமன்னாரில் 100 மில். ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் நால்வர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் கிராமம் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிப் படகொன்றின் வலைக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் 9 கிலோ 735 கிராம் ஐஸ் போதைப்பொருள் மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் கடற்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்பில் மன்னார் பொலிஸ் நிலைய பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி மஞ்சுளாவின் ஆலோசனையில் தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையிலான குழுவினர் மேற்படி ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மீன்பிடிப் படகொன்றில் வலைக்குள் சுற்றிவைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகுடன் சந்தேகநபர் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இன்றைய மதிப்பில் 80-100 மில்லியன் ரூபா பெறுமதியுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் போதைப்பொருள் மற்றும் சந்தேகநபர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 14 வயது சிறுமியை கடத்திய குற்றச்சாட்டில் இளைஞரொருவர் கைது

(ஜூட் சமந்த)

பெற்றோரின் பாதுகாப்பிலிருந்த14 வயது சிறுமியை கடத்திய குற்றச்சாட்டில் இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், தில்லடிய பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமது மகளை இனந்தெரியாத நபரொருவர் கடத்திச்சென்று புத்தளம், தில்லடிய பிரதேசத்தில் வீடொன்றில் தடுத்துவைத்திருப்பதாக கற்பிட்டி, பாலசோல பிரதேசத்தைச் சேர்ந்த தாயொருவரால் நேற்று முன்தினம் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாட்டுக்கமைய, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த சிறுமியும் சந்தேகநபரிடமிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி இரவுவேளையில் மலசலகூடம் செல்வதாக தெரிவித்து வீட்டிலிருந்து சென்ற குறித்த சிறுமி மீண்டும் வீட்டுக்கு வரவில்லையென குறித்த சிறுமியின் தாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சிறுமி சந்தேகநபரை காதலித்து வந்துள்ளதாகவும், அதன் காரணமாக பெற்றோருக்கு தெரியாமல் திருட்டுத்தனமாக காதலனுடன் சென்றுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும், சந்தேகநபரை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மஸ்கெலியாவில் மின் தகனசாலை

## அமைக்க பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேசத்தில் ஏற்படும் மரணச் சம்பவங்கள் அனைத்தும் பி.சி.ஆர். பரிசோதனைக்காக கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு தொற்று உறுதிசெய்யும் பிரேதங்களை நோர்வூட் தகனசாலையிலேயே தகனம் செய்யவேண்டிய நிலைக்கு மஸ்கெலியா மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேசத்தில் ஒரு மின் தகனசாலை அமைக்கப்பட்டால் எமது மக்களுக்கு இலகுவான முறையில் இவ்விடயத்தை முன்நடத்திச்செல்ல முடியும் என்ற விடயத்தை வலியுறுத்தி நேற்று முன்தினம் மஸ்கெலியா பிரதேச சபை அமர்வின்போது உறுப்பினர் ராஜ் அசோக்கினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மஸ்கெலியா பிரதேசமானது கிட்டத்தட்ட 60 ஆயிரத்துக்கும் அதிகமான சனத்தொகையை உள்ளடக்கிய ஒரு பாரிய பிரதேசம். ஆனாலும் இவ்வளவு பெரிய பிரதேசத்தில் ஒரு மின் தகனசாலை இல்லாதது மிக முக்கிய பிரச்சினையாகும். அதாவது, நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் மஸ்கெலியாவிலிருந்து கிளங்கன் வரை பயணிப்பதே மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

அது மாத்திரமன்றி, வைத்தியசாலையில் பிரேதத்தை பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆகவேதான் மஸ்கெலியா பகுதியில் மரணிப்பவர்களை மஸ்கெலியா வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனை செய்தால் இந்த மக்களின் சுமை குறையும். எதிர்காலத்தில் மஸ்கெலியா வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்படவிருப்பதால் இந்த வேலைத் திட்டத்திற்கு சாதகமானதாக அமையும்.

எனவேதான் மஸ்கெலியா பிரதேசத்தில் ஒரு மின் தகனசாலை அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக்கினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து இது சம்பந்தப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் மாவட்ட செயலகம் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு பிரேரணை கடிதம் அனுப்பத் தயார் நிலையில் இருப்பதாகவும் சபையில் முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணைக்கு ஆதரவளித்த சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ‘சமூக அறிவியல் வெளி’ இதழ் வெளியீடு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினரால் (பிரிவு டி) ‘சமூக அறிவியல் வெளி’ என்ற இதழ் வெளியிடப்பட்டுள்ளது. சமூக விஞ்ஞானத்துறைசார்ந்த அறிவை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பகிரும் நோக்கம் கருதி ‘பேரிடர்கால இடர்களை வெல்லும் சமூக அறிவியல் அணுகுமுறைகள்’ என்ற தொனிப்பொருளில் இந்த இதழ் தமிழில் வெளிவந்துள்ளது.

கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி அறக்கட்டளை, இதழ் வெளியீட்டுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. இதில் சமூக அறிவியல் சார்ந்த 06 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

‘கீழைத்தேச ஏகாதிபத்தியத்தின் எழுச்சியும் மேற்குலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியும்’ (பேராசிரியர் ஏ.ரி. கணேசலிங்கம்), ‘ஞாபகம் மற்றும் மறதி’ (தி.திலீபன்), ‘இயற்கை நோக்கிய பயணம்’(கலாநிதி. வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்), ‘கொவிட் - 19 காலத்தில் தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்’ (தேவரஞ்சினி சிவாஸ்கரன்), ‘ஆங்கில மொழிக் கற்பித்தலில் அரங்க செயற்பணிகளின் பயன்பாடு’ (கலாநிதி கந்தையா சிறிகணேசன்) , ‘பேரிடர்கால சமூக அரசியல் யதார்த்தங்களை வெளிப்படுத்தும் அரங்கு’ (தேவநாயகம் தேவானந்த்) ஆகிய தலைப்புகளில் இந்த இதழில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.



கொவிட்-19 பெரும் தொற்று மிக மோசமாகி பொதுமுடக்கம் நடைமுறையிலுள்ள சூழலில் இந்த இதழ் வெளியீடு மிக எளிய முறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி.சற்குணராஜா இதழை வெளியிட்டு வைத்தார். இதழின் முதல் பிரதியை இதழின் பிரதம ஆசிரியர் தேவநாயகம் தேவானந்த் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு - டியின் தலைவி தேவரஞ்சினி சிவாஸ்கரன் ஆகியோர் துணைவேந்தருக்கு வழங்கினர்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இந்த இதழ் ஆய்வு மற்றும் பட்டறிவுக்கான அறிவுப்பகிர்வுக் களமான இருக்கும். இதில் எவரும் கட்டுரைகளை எழுத முடியும். இந்த இதழுக்கு கல்வியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தொழில்முனைவோர், கலைஞர், மாணவர்கள் என்ற பலதரப்பினரும் கட்டுரைகளை எழுத முடியும் என இதழாசிரியர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வெளிவரும் இரண்டாவது இதழுக்கான கட்டுரைகளை ptthevananth@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கலாம்.

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொடிகாமம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் இயற்றாலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ராஜன் சிந்துஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இயற்றாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் உயிரிழந்த இளைஞன் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 104 வயது மூதாட்டி கொரோனாவுக்கு பலி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனா தொற்றினால் 104 வயதுடைய மூதாட்டி ஒருவர் உட்பட 11 மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று காரணமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 104 வயதுடைய கதிரவேல் அமிர்தம் என்றழைக்கப்படும் மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



மேலும், தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த மற்றும் தொற்றுக் குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தவர்கள் என மொத்தமாக 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் உயிரிழந்த 11 பேரின் சடலங்களை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# பிரதேச செயலக அதிகாரியின் கடமைக்கு இடையூறு விளைவித்த நபரொருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை-மொரவெவ பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் குடியேற்ற உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடியேற்ற உத்தியோகத்தர் திருகோணமலை - ஹொரவபொத்தானை பிரதான வீதியிலுள்ள 10ஆம் கட்டை பகுதியில் அரசுக்குச் சொந்தமான காணியை பரிசீலனை செய்வதற்கு சென்றபோது குறித்த நபர் குடியேற்ற உத்தியோகத்தரை தாக்க முற்பட்டதாகவும், அவருடைய கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் குடியேற்ற உத்தியோகத்தர் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட மொரவெவ பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைதுசெய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் மொரவெவ, 10ஆம் கட்டை கித்துல்உதுவ பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.ஏ.பீ.பீ.விக்ரமசிங்ஹ (46 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியதுடன், அவர் மதுபோதையில் இல்லை எனவும் வைத்தியசாலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# புதையல் தோண்டிய பௌத்த பிக்கு கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - காரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பபுருகஸ்ஹின்ன காட்டுப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின்பேரில் நேற்று முன்தினம் பௌத்த பிக்கு ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் மொரவெவ - நாமல்வத்த கல்கந்த சயில பப்பதாராம விகாரையின் விகாராதிபதி (49 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த பௌத்த பிக்குவை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு





(அட்டாளைச்சேனை நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்வதற்கான வேலைத்திட்டங்களை கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான கள விஜயத்தை கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் மாலை மேற்கொண்டார்.

இதன்போது பொத்துவில் முகுது மஹா விகாரைக்கும் விஜயம் செய்ததுடன், அதனையொட்டியுள்ள கரையோரப் பிரதேசங்களையும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இதன்போது இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க, பொத்துவில் பதில் பிரதேச செயலாளர் சந்தரூபன், முகுது மஹா விகாராதிபதி மற்றும் அமைச்சு உயர் அதிகாரிகள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டு. வலையிறவு வாவியில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள வலையிறவு வாவியிலிருந்து நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு காயமடு பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய யோகநாதன் ராயூ என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடி எருவிலைச் சேர்ந்த குறித்த நபர் காயமடு பகுதியில் ஹோட்டலொன்றை நடத்தி வருகின்றார். அந்த ஹோட்டலில் வேலைசெய்த பெண் ஒருவரை கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருமணம் முடித்துள்ளார். இந்நிலையில், குறித்த நபர் ஏற்கனவே திருமணம் முடித்தவர் என்பதுடன், முதல் மனைவி வவுணதீவு பொலிஸாரிடம் முறைப்பாடும் பதிவுசெய்துள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் குறித்த நபரை அழைத்து விசாரணையின் பின்னர் அவர் தனது சகோதரிகளிடம் செல்வதாக பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறிய நிலையில், காணாமல்போயுள்ளதாக அவரது மனைவி மற்றும் உறவினர்கள் தேடிவந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று வலையிறவு வாவியில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் வாவியின் நடுப்பகுதியில் மிதந்த சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் காணாமல்போன தனது கணவர் என அவரது மனைவி மற்றும் உறவினர்கள் அடையாளம் காட்டியதையடுத்து, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு, மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரியநீலாவணை தொடர்மாடி குடியிருப்பில் 11 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம்



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பெரிய நீலாவணையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறி வசித்துவரும் கோப்பிரேஷன் தொடர் மாடிக் குடியிருப்பில் நேற்று எழுமாறாக 29 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 11 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி யிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர், குறித்த பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது கல்முனை வடக்கில் கொரோனா நோயாளர்களின் வீதம் குறைவடைந்து வருகின்றது. கடந்த இரு தினங்களில் 19 பேர் மாத்திரமே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். பொதுமக்கள் அனைவரும் தங்களது சுகாதார நலனில் அககறையுடன் செயற்படுவதுடன், அரசாங்கத்தின் சுகாதார விதிமுறைகளை இறுக்கமான முறையில் கடைப்பிடித்து நடக்குமாறு பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மட்டு. கருவப்பங்கேணியில் கசிப்புடன் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கசிப்பு, கஞ்சா வியாபாரி உட்பட இருவரை 70 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கசிப்புடன் நேற்று புதன்கிழமை பகல் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சார்ஜன் ரி.கிருபாகரன் தலைமையிலான பொலிஸார் குறித்த பிரதேசத்திலுள்ள வீட்டை நேற்று பகல் முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்துக்காக வைத்திருந்த கசிப்புடன் இருவரை கைதுசெய்ததுடன், 70 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கசிப்பையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட கசிப்பு, கஞ்சா வியாபாரிமுன்னரே பல குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் வந்துள்ளதுடன், இவருக்கு எதிராக பல வழக்குகள் இருப்பதாகவும் இதில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# 35 வருடங்களாக வீடின்றித் தவித்த 30 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்



(சாவகச்சேரி நிருபர்)

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து 35 வருடங்களாக இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் காணியற்ற 30 குடும்பங்களுக்கு தெல்லிப்பழை, வறுத்தலைவிளான் பகுதியில் காணி மற்றும் வீட்டுத்திட்டம் ஆகியன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்காக ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அண்மையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ் வந்தபோது முன்னெடுக்கப்பட்டது.

வீட்டுத்திட்டத்துடன் உள்ளக வீதி, மலசலகூடம் ஆகிய வசதிகளையும் குறித்த மாதிரிக் கிராம மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

இதன்போது மணல் விலையை வீட்டுத்திட்ட மக்களுக்கு குறைத்து வழங்கி வீட்டுத்திட்டத்தை முழுமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

35 வருடங்களாக வீடு மற்றும் நிலம் இன்றித் தவித்த தமக்கு வீடு கிடைக்க நடவடிக்கை எடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன், அரசாங்க அதிபர், பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோருக்கும் அம்மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்திருந்தனர்.

# கொரோனாவிலிருந்து பாதுகாப்புப் பெற விலங்குகளிடமிருந்து விலகியிருப்போம்

## நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் நக்பர்



(பாறுக் ஷிஹான்)

கொரோனாவிலிருந்து பாதுகாப்புப் பெற மக்கள் காட்டுவிலங்குகள், பறவைகளின் தொடர்புகளை குறைத்துக் கொள்வதுடன், தற்போதைய கொரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்தத் துறையினராக இருப்பினும் ஏற்றுக்கொள்ள வேண்டும் - என நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையில் கொரோனா தொற்றுநோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

தற்போதைய கொரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்தத் துறையினராக இருப்பினும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது பொதுமக்கள் சரியான முறையில் சுகாதார பழக்கவழக்கங்களை கையாள்வதில்லை என்பதாகும். அதுமாத்திரமன்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கமைய இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை வயது வித்தியாசமின்றி முழுமையாக நாங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது பிராந்தியத்திலுள்ளவர்கள் வீடுகளில் ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். தேவையற்று வீட்டிலிருந்து வெளியேறுவதைத் தவிருங்கள்.

இதற்கு அடுத்ததாக ஆயுர்வேத சுகாதாரத்துறையானது மக்களுக்கு காட்டுவிலங்குகள், பறவைகளின் தொடர்புகளை குறைத்துக்கொள்ளுங்கள் என்பதில் ஆலோசனை வழங்குகின்றது. அடிக்கடி தோடம்பழம், தேசிக்காய் போன்ற பானங்களை நாம் அருந்த வேண்டும்.

அதிகமான இயற்கை உணவுகளை நாம் உண்ணவேண்டும். 8 தொடக்கம் 10 மணிவரை ஓய்வெடுக்க வேண்டும். அரிசிக் கஞ்சி போன்றவற்றை அடிக்கடி அருந்தவேண்டும். மாமிச உணவுகளை தவிர்ப்பது நல்லது. சூரிய ஒளி ஒரு மணித்தியாலம் கிடைக்கக்கூடிய வகையில் இருத்தல்வேண்டும். எமது வீடுகள், நாம் வசிக்கின்ற இடங்களை நன்கு காற்றோட்டமுள்ள இடமாக மாற்றிக்கொள்ளல் வேண்டும். இவற்றை செய்வதனூடாக டெல்ட்டா மாத்திரமல்ல, எந்த வைரஸ் திரிபுகள் எதிர்காலத்தில் உருவாகினாலும் அந்த நோயிலிருந்து நாம் எம்மை முழுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்குதலானது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடாகும். இதனால் ஆயுர்வேத மருந்து வகைகளை பாவிப்பதனாலும் எந்தவொரு பக்க விளைவுகளும் இந்தத் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு ஏற்படாதென நம்புகின்றேன். எனவேதான் மக்கள் தடுப்பூசிகளை முதலில் ஏற்றிக்கொண்டு பக்கபலமாக இந்த ஆயுர்வேத மருந்துகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதனூடாக கொரோனா தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

# கிண்ணியா வட்டமடு கொரோனா மையவாடிக்கு மின்குமிழ்கள் அன்பளிப்பு



(கிண்ணியா நிருபர்)

கொரோனா ஜனாஸாக்களை அடக்கம்செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ள கிண்ணியா வட்டமடு மையவாடிக்கு அத்தியாவசியமான தேவைப்பாடுகளில் ஒன்றாக காணப்பட்ட 10 இலட்சம் பெறுமதியான LED மின்குமிழ்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்பால் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் கே.எம்.நிகாரிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கையளிக்கப்பட்டன.

இம்மின்குமிழ்களை பெயர் குறிப்பிட விரும்பாத மூன்று குடும்பங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் ஊடாக அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நடமாடும் வங்கிச் சேவை முன்னெடுப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அரச வங்கிகளினால் நடமாடும் வங்கிச் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய கொரோனா தொற்று பயணக்கட்டுப்பாடு காரணமாக வங்கிகளுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளோரின் நலன்கருதி கிராமங்களில் நட மாடும்



ஏ.டி.எம். வங்கிச் சேவை நடைபெறுகின்றது.

கிராமப்புறங்களுக்குச் செல்லும் நடமாடும் ஏ.டி.எம். வங்கிச் சேவையானது அங்குள்ள பொது இடங்களில் தரித்துநின்று மக்களுக்கான சேவையை முன்னெடுத்து வருகின்றது.

நேற்று முன்தினம் செட்டிப்பாளையம் பகுதியில் இச்சேவை முன்னெடுக்கப்பட்ட போது, அங்குள்ள மக்கள் ஏ.டி.எம்.சேவை மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டனர்.




# உதயசூரியன் அஸ்தமித்து 21 ஆண்டுகள்

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காவிய நாயகன் எம்.எச்.எம். அஷ்ரப், மறைவின் 21ஆவது ஆண்டு பூர்த்தி இன்று அனுஷ்டிக்கப்படுகிறது**

**நூருல் ஹுதா உமர்**
மாளிகைக்காடு

மிக நீண்ட கால வரலாற்றை கொண்ட முஸ்லிம் அரசியலில் ஒரு பெயர் தவிர்க்கமுடியாத சக்தியாக அரசியல் அரங்கில் எப்போதும் பேசப்படுகிறது. இவர் காலத்தை வைத்து முஸ்லிம் அரசியலை இவருக்கு முன்னர், இவருக்குப் பின்னர் என இரண்டாக பிரிக்கலாம் எனும் நிலையே தவிர்க்கமுடியாத ஒன்றாக இப்போது உள்ளது. அவர்தான் மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப். முஸ்லிம் அரசியலுக்கு முகவரி பெற்றுக்கொடுத்த மாமனிதராக, பெருந்தலைவராக கொண்டாடப்படும் முஸ்லிம்களின் முடிசூடா மன்னனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காவிய நாயகனுமான முஹம்மட் ஹுசைன் முஹம்மட் அஷ்ரப் மறைந்து, இன்றுடன் 21 ஆண்டுகள் கடந்து விட்டன.

**உதயமான அஷ்ரப் எனும் ஆளுமை**

முஸ்லிம்களால் மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கையர்களினாலும் சிறந்த தலைவராக கொண்டாடப்படும் அஷ்ரப், 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில், பச்சை வயல் நிறைந்த மலை முகடுகள் பரந்த மிகப்பெரிய கிராமமான சம்மாந்துறையில், முஹம்மது மீரா லெப்பை ஹுஸைன் மற்றும் மதீனா உம்மா தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக கல்முனையில் பிரபலமான காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். கல்முனைக்குடி அல்-அஷ்கர் வித்தியாலயத்தில் தனது கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பித்த அஷ்ரப், சட்டக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே இலங்கை அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டார். அதனாலேயே அஷ்ரப் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். தந்தை செல்வ நாயகத்தை தனது அரசியல் குருவாக அஷ்ரப் வகுத்துக் கொண்டார். அரசியலையும், சமூகத்தையும், சட்டக்கல்வியையும் காதலித்த அதே அளவுக்கு தன் வாழ்க்கைத்துணையாக தேர்ந்தெடுத்த பேரியல் இஷ்மாயிலையும் காதலித்து தனது இல்லற வாழ்வை 1977 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். காதலின் அடையாளமான அமான் அஷ்ரப் எனும் ஒற்றை புதல்வருக்கு சிறந்த தந்தையாகவும் அவர் வாழ்ந்து மறைந்துள்ளார்.

இலங்கை முஸ்லிம்கள் நீண்ட வரலாறு கொண்டவர்கள். இலங்கையின் பூர்வீகக் குடிகள். ஆரம்ப காலம் தொட்டு அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள். மூவின மக்கள் வாழும் இந்த நாட்டில் அரசியல், பொருளாதார, கலை, கலாசார விடயங்களில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. சுதந்திரப் போராட்டத்தின்போது பிரித்தானியர்கள் மூவின மக்களையும் பிரித்து சுதந்திரப் போராட்டத்தை பலவீனப்படுத்த எடுத்த முயற்சியினால் மூவின மக்களின் உறவு பிளவுபட்டது. பின்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற உணர்வு அந்தந்த மக்களிடையே மேலோங்கி இருந்தது. சிங்களவர்களுக்கு 2 தேசியக் கட்சிகளும் தமிழர்களுக்கு தமிழரசுக் கட்சி என்றும் தோற்றம் பெற்றன. ஆனாலும், முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனிக்கட்சி இல்லாமலே காலம் கடந்து சென்றது. முஸ்லிம்கள் பிற இனத்துவ கட்சிகளின் மூலமாக தங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தனர். ஆனால், அவர்களால் அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தை தாண்டி முஸ்லிம்களின் உரிமைகளை பேசக்கூடியதாக இருக்கவில்லை. அதுவரை முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் கட்சி இல்லாததால் அவர்கள் பல பின்னடைவுகளை எதிர்நோக்கி வந்தனர் என்பதை வரலாறு தெளிவாக முன்வைக்கிறது.

இலங்கை அரசியல் மீதும், முஸ்லிம் சமூகத்தின் மீதும் பற்றுக்கொண்ட எம்.எச்.எம். அஷ்ரப், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்டு முஸ்லிம் சமூகத்தைப் பற்றி அதிகமாக சிந்திக்கத் தொடங்கினார். சிறுபான்மைச் சமூகம் தனித்துவங்களை அடையாளப்படுத்தி தனது உரிமைகளுக்காக போராடாதவரை அந்த சமூகங்கள் கையேந்தி நிற்க வேண்டிய அவல நிலையை அவர் மிகத்தெளிவாக அறிந்தார். 1977ஆம் ஆண்டு முஸ்லிம் சமுதாயத்தையும் காயப்படுத்தி முஸ்லிம்களுக்கென்று ஓர் அரசியல் கட்சி தேவை என்பதை வலியுறுத்தும் சம்பவம் புத்தளத்தில் நடந்தது. புத்தளம் ஜும்ஆப் பள்ளியில் தொழுது கொண்டிருந்த மக்கள் மீது பொலிஸாரால் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவம் அரங்கேறியது. அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சியில் எந்த ஒரு முஸ்லிம் பிரதிநிதியாலும் நாடாளுமன்றத்தில் அது பற்றி வாய்த் திறந்து பேச முடியவில்லை. எதிர்க்கட்சியில் இருந்த ஏ.சி.எஸ்.ஹமீத் பேச முயன்ற போது அவரது கட்சியின் தலைமையும் அதனை தடுத்தது. இந்த விடயம் முஸ்லிம்களை பொறுத்த வரையிலே மிகவும் ஒரு கவலைக்குரிய விடயமாக இருந்தது.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரம் முளைத்தது**

தனது சிறுவயது முதலே முஸ்லிம்களுக்கென்று தனி இயக்கம் வேண்டும் என்று சிந்தித்த இளைஞன் அஷ்ரப், 1981 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் முதலாவது மு.கா. ஸ்தாபக கூட்டத்தை நடத்தினார். இலங்கை வரலாற்றில் 1980 ஆம் ஆண்டு மிகவும் கொந்தளிப்பாக சிங்கள பேரினவாத சக்திகள் சிறுபான்மையினர் மீது பாரிய வன்முறைகளை கட்டவிழ்த்து விட்ட சம்பவங்கள் நடந்தேறின. தமிழ்த் தேசிய வாதம் இளைஞர்களின் கைகளுக்கு சென்று பல ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோன்றின. முஸ்லிம் இளைஞர்களும்






அந்த இயக்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டனர். ஆனாலும், அங்கே அவர்கள் தமது அடையாளங்களுடன் இருப்பது சாத்தியமற்று போகவே தமிழ், முஸ்லிம் உறவில் பாரிய விரிசல்கள் ஏற்பட்டன. கிழக்கில் வியாபித்த 83 கலவரத்தின் போது தலைவர் அஷ்ரபின் கல்முனை வீடு ஆயுததாரிகளினால் தீக்கிரையாக்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சியை கனவு கண்ட அவர் அகதியாக கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். அங்கே அவர் தனது சட்டப் பரீட்சையை தொடர்ந்து கொண்டு அவரது இலட்சியப் பாதையில் பயணித்தார். கிழக்கு மாகாண முஸ்லிம்களது பிரச்சினைகளை தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்வதில் முனைப்புடன் செயற்பட்ட அஷ்ரப், கிழக்கு மாகாண மஜ்ஜிதுகள் சம்மேளனம் தமது பிரச்சினைகளை அரசிடம் எடுத்து செல்வதற்கு ஆற்றல் மிக்கவராக இனம் கண்டது. எம்.எச். எம். அஷ்ரப், தனது இளமைக்காலத்திலிருந்தே தமிழரசுக் கட்சியில் இளைஞர் பேரவையில் இருந்தவர் என்றபடியால் தமிழரசுக் கட்சியின் தலைவர்களிடம் நெருங்கிய தொடர்பில் இருந்தார். அவர்களிடம் முஸ்லிம்கள் தமிழ் மொழியை பேசினாலும் அவர்கள் எப்படியும் தனித்துவமான இனமாகக் காணப்படுகின்றனர் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார். 1986 இல் அண்ணன் அமிர்தலிங்கத்துடனான இரவு இரண்டு மணி வரை நீடித்த வாக்குவாதத்தின் பின்னர் அன்றிரவே முஸ்லிம் காங்கிரஸை ஓர் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு அஷ்ரப் வந்தார். மேலும் அன்றிரவே சக தோழர்களிடம் பைஅத்தும் (உறுதிமொழி) செய்து கொண்டார். அந்த செய்தியை விடிந்ததும் தினகரன் பத்திரிகையின் தலைப்பு செய்தியாக வரச் செய்தார்.

1987 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முடிவெடுத்தார். அத்தேர்தலை தமிழ் இயக்கங்கள் பகிஷ்கரித்தன. விடுதலைப் புலிகள் அத் தேர்தலை தடை செய்தன. அதையும் கேட்காமல் முஸ்லிம் காங்கிரஸ் களத்தில் இறங்கியது. சில இடங்களில் தேர்தல் பணிகளையும் மேற்கொண்ட பொழுது முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த, அனைவருக்கும் பதிவுத்தபாலில் விடுதலைப் புலிகளினால் கடிதம் அனுப்பப்பட்டது. ஒகஸ்ட் 2 ஆம் திகதிக்கு முன்னர் நீங்கள் வாபஸ் வாங்காவிட்டால் என்ன விலை கொடுத்தாயினும் உங்கள் உயிரை நாங்கள் கைப்பற்றுவோம். முஸ்லிம் காங்கிரஸ் அந்த நேரத்தில் மரண அச்சுறுத்தலையும் தாண்டி போட்டியிடத் தீர்மானித்தது. அந்த முடிவே முஸ்லிம் காங்கிரஸின் உறுதியையும் அதன் பாதையையும் அடையாளம் காட்டியது. அத்தருணம் முதலே முஸ்லிம் காங்கிரஸை மக்கள் மனங்களில் ஏந்தத் தொடங்கினர். தமிழர்கள் இந்த செயற்பாடானது பேரினவாத சக்திகளின் தூண்டுதலால் இடம்பெறுகிறதா என்ற சந்தேகக் கண் கொண்டு பார்த்தனர். இத்தேர்தல் பிரசாரத்தின்போது சந்தாங்கேணி மைதானத்தில் நடந்த கூட்டத்தில் அஷ்ரப் ஆற்றிய உரை மிகவும் முக்கியமானது. நாங்கள் யாருக்கும் அஞ்சாதவர்கள். அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் அஞ்சுகின்றவர்கள் என்றார். ஆனால், அந்த சமயத்தில் நடந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக அந்த தேர்தல் இடம்பெறவில்லை என்பது வேறுகதை.



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் நிறைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன்முதலாக பலத்த அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசியல் பிரவேசம் செய்தது. எதிர்பார்த்ததற்கு மேலாக வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கி னார்கள். அக்கால கட்டத்தில் ஜே.ஆர். ஜயவர்தனவின் பதவிக் காலம் முடிவு பெற்று நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அடுத்த ஜனாதிபதியாக போட்டியிடுவதற்குத் தயாராக இருந்த ஆர்.பிரேமதாஸவுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மேற்கொண்ட உடன் படிக்கையின் மூலமாக நாடாளுமன்றத்தின் கடைசி அமர்வில் தேர்தல்



வெட்டுப் புள்ளியை 12.5 இலிருந்து 5 வீதமாக குறைத்து சிறுபான்மை மக்களினது நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கையை நியாயமான முறையில் பெற்றுக் கொள்ள அடித்தளமிட்டனர்.

உத்வேகத்துடன் 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன்முதலாக போட்டியிட்டு அந்தத் தேர்தலில் நான்கு இடங்களைக் கைப்பற்றியது. தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப், இளம் வேட்பாளர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஏ. அபூபக்கர், என்.எம். புகார்தீன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களானார்கள். இந்தப் பிரவேசத்தின் மூலம் முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சியின் வெற்றிடம் நிரப்பப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மாகாண சபைக் கூட்டத் தொடரின் கடைசி நாளன்று நடந்த ஈழப் பிரகடனத்தை முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் எதிர்த்தனர். ஆனாலும், தமிழர்களின் போராட்டத்தின் நியாயங்களை உணர்ந்த முஸ்லிம் காங்கிரஸ், தமிழர்களுக்காக இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பை வலியுறுத்தும் அம்சங்களையும் கூறினர்.

1994 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியமைப்பதற்கான வாக்கு பலம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் அமைந்தது. அந்த சந்தர்ப்பத்தில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்தது. சந்திரிகா குமாரதுங்கவின் கட்சிக்கு ஆதரவு வழங்குவதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்து நிபந்தனைகளுடனான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. முஸ்லிம் மாகாண சபை, இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளின்போது தனித்தரப்பாக முஸ்லிம் காங்கிரஸ் உள்வாங்கப்படல், முஸ்லிம்களுக்கான கரையோர மாவட்டம் போன்ற விடயங்களை அவர் ஒப்பந்தம் உள்ளடக்கியிருந்தது. வரலாற்றில் முதன் முறையாக சிங்களத் தலைமைத்துவமொன்று முஸ்லிம்களின் வலுப்பாட்டை கொள்கை ரீதியாக ஏற்று எழுத்து மூலமாக கைச்சாத்திட்ட நிகழ்வு இதுவாகும். முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பயணத்தில் இது ஒரு முக்கிய படியாகும். ஆட்சியில் பங்கு கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு முக்கிய அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டன. அந்த அதிகாரத்தின் மூலம் மக்களுக்கு எவ்வளவு சேவை செய்யலாம் என்பதற்கு அஷ்ரப் உதாரணப் புருஷராக விளங்கினார். பாரிய அபிவிருத்தி திட்டமாக தென்கிழக்கு பல்கலைக் கழகம், ஒலுவில் துறைமுக அதிகார சபை, வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளி னால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு புனர் வாழ்வு அளித்தமை போன்ற எண்ணில டங்கா செயற்பாடுகளாகும்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாட்டுக்கு புதிய அரசியல் யாப்பு சீர்திருத் தத்தை வரைவதில் அஷ்ரப் மிகத் தீவிரமாக உழைத்திருந்தார். பலவகையான அரசியல் வியூகங்களை அமைப்பதில் திறமையாக இருந்த அஷ்ரப், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். அதன் பெறுபேறாகத் தான் நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் பெரும் பொறுப்பு அவருக்குக் கிட்டியது. சுமார் 3 மணித்தியாலங்களாக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் பலத்த கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் ஆற்றிய உரை இலங்கை அரசியல் வரலாற்றில் நினைவு கூரப்படும் சிறப்புக்குரியதாகும். அரசியல் என்பது அஷ்ரபின் வாழ்வில் ஒரு சிறு பகுதி மட்டுமே. அதற்கப்பால், அஷ்ரபின் பல்துறை சார்ந்த ஆளுமையே அவரை ஒரு மகா புருஷராக எம்முடன் நடமாட வைத்துள்ளது. அஷ்ரபின் பேச்சுத் திறனும் தர்க்கிக்கும் ஆற்றலும், விவாதத் திறனும் மெய்மறக்கச்



செய்யும் வல்லமை கொண்டவை என்கின்றனர் அரசியல் ஆராய்வாளர்கள்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் வாழ்க்கை ஓட்டத்தை அணுகி ஆராய்வோர் அவரிடம் தனித்திறமையான ஓர் ஆற்றல் பரிணமித்திருந்ததை ஏற்றுக் கொள்வார்கள். அந்த வகையில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஒரு வாழ்க்கைத் தத்துவமாக நிற்கின்றார். அதனால் தான் அவரால் மரணத்தை நோக்கி சிந்திக்க முடிந்தது. மரணத்தோடும் அவரால் போராட முடிந்தது. அவரால் மரணத்தை நோக்கி அறைகூவல் விடுக்கவும் மானுடத்தை நோக்கி நேசக்கரம் நீட்டவும் முடிந்தது. 'நான் எனும் நீ' கவிதைத் தொகுப்பை தந்த கவிஞர் அஷ்ரப், சிறந்த இலக்கிய ஆளுமையாகவும் தன்னை நிலை நிறுத்தினார். 'புதிய வெளிச்சங்கள்' எனும் பாடல் தொகுப்பு உணர்ச்சி பொங்கும் வரிகளினால் உணர்வு நிரம்பிய ஒன்றாகவே இன்றும் உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அஷ்ரபுக்கு பின்னரான தலைமைத்துவ நடவடிக்கைகளில் எழும் மிகப்பெரிய முரண்பாடுகளையும் அதிருப்திகளையும் தேர்தல் காலங்களில் மறக்கடிக்கச் செய்யும் ஆற்றல் தலைவர் அஷ்ரபின் கவிவரிகளில் உருவான புதிய வெளிச்சங்கள் எனும் பாடல் தொகுப்பு இறுவெட்டுகளில் உள்ளது என்றால் மிகையாகாது. தலைவர் அஷ்ரபின் கவி வரிகளில் உருவான புதிய வெளிச்சங்கள் எனும் பாடல் தொகுப்பு இறுவெட்டுகளை தடை செய்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கில் மிகப்பெரிய சரிவை காணலாம். அந்தளவிற்கு கிழக்கு முஸ்லிம்களை பற்றி ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தார் மறைந்த முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப்.

சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தை 1986 இல் உரிய வகையில் பொறுப்பேற்ற பின்னர், முஸ்லிம் காங்கிரஸிற்கு புதிய தொலைநோக்கையும், புதிய பாதையையும் கொடுத்தார். அவர் மு.கா. கட்சியின் தலைமைப்பொறுப்பில் 15 வருடங்களாக இருந்த காலத்தில், அவரின் இலட்சிய வீறும், சாதிக்கும் ஆற்றலும் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல சாதனைகளைக் கண்டது. இவரது வசீகரம், அரசியல் நிலைமைகளை சரியாக கணக்குப் போடும் திறன், அர்ப்பணிப்பு, ஒரு தலைவருக்குரிய பண்பு ஆகியவற்றின் காரணமாகவே பல காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த கிழக்கு முஸ்லிம்களை, தனித்து இயங்கக்கூடிய ஒரு சக்தியாக உருவாக்க இவரால் முடிந்தது என்கின்றனர் இவர் காலத்தில் இவரை உற்றுநோக்கியவர்கள்.

**வெடித்து சிதறிய முஸ்லிம்களின் அரசியல் கனவு!**

21 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றொருநாள் 16 ஆம் திகதி சனிக்கிழமை (16.09.2000) இலங்கைக்கு மிகப் பெரும் துயரத்தைக் கொண்ட நாளாக விடியும் என்று எவருமே அன்று தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் போது நினைத்திருக்க மாட்டார்கள். அன்று காலை 9.05 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திலிருந்து இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று கிழக்கு நோக்கிப் பறந்து சென்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும்,

ஜனாதிபதி சட்டத்தரணியும், கப்பல் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம்.எச்.எம் அஷ்ரப், அன்று காலை அம்பாறை, இறக்காமத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக மேலும் 14 பேருடன் ஹெலிகொப்டரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

கொழும்பிலிருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அரநாயக்கப் பகுதியில் இருக்கும் “பைபில் றொக்” (Bibil Rock) மலைப்பகுதியின் மேலாக ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்த போது திடீர் விபத்துக்குள்ளானது. பலத்த வெடியோசையுடன் தீப்பிழம்பாக வானத்தில் வெடித்துச் சிதறியது. அமைச்சரும் அவருடன் பயணம் செய்த மேலும் 14 பேரும் விபத்தின் போது அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

ஹெலிகொப்டர் சிதைவுகளுக்கு மத்தியிலிருந்து கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டன. அமைச்சர் அஷ்ரபின் ஜனாஸாவை சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க அடையாளம் காட்டினார். அமைச்சர் அஷ்ரப் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி மரணமானார் என்ற செய்தி கிழக்கு மாகாணத்தை எட்டிய போது, அரசியல் பேதங்களை மறந்து மக்கள் வாய்விட்டுக் கதறினார்கள். சோகம் தாளாமல் தாய்மார் தலையில் அடித்துப் புலம்பினார்கள். அமைச்சரை வரவேற்பதற்காக மாபெரும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண வீதியெங்கும் துயரவெள்ளம் கரைபுரண்டது.

வரலாறு காணாத சோகத்தில் கிழக்கு மாகாணம் மூழ்கிப் போனது. தனது சொந்த சகோதரனை அல்லது தான் 10 மாதம் சுமந்து பெற்ற பிள்ளையை இழந்த துயரத்தில் தாய்மார் தலையில் அடித்துக்கொண்டு கதறி அழுதார்கள்.

கிழக்கு மாகாண மக்கள் செயலிழந்து நடைப்பிணமாக நின்றார்கள்.

கூடவே மின்சாரமும் தடைப்பட்டிருந்த நாள் அது. அந்த காட்சியை காணாதவர்கள் இலங்கை தாய்நாடு சுனாமியன்று எப்படி இருந்தது என்பதை கண்டு கொண்டால் போதுமானது.

விமான வெடிப்பு, விபத்தா அல்லது நாச வேலையா என ஆராய புலனாய்வுகள் தொடங்கப்பட்டன. அஷ்ரபின் மரணம் தொடர்பில் சதி வேலைகள் பற்றி பலவிதமான கருத்துகள் அடிபட்டன.

புலனாய்வு முடிவுகள் இதுவரை வெளியாகவில்லை. புலனாய்வின் முடிவு எப்படி இருந்தாலும், தலைவர் அஷ்ரபின் மரணம் இதுவரை நிரப்பப்படாத வெற்றிடத்தை முஸ்லிம் அரசியலில் உருவாக்கிவிட்டது.

அவர் அரசியலில் கால்பதித்து மு.கா. தலைவராக உதயமாகி பின்னர் நுஆ (தேசிய ஐக்கிய முன்னணி)யின் ஸ்தாபகராக பரிணமித்த காலம் வரை அவரின் அரசியல் வரலாறு நீண்டு மரணிக்கும் வரையிலும்,

இவர் முஸ்லிம்களின் ஒரேயொரு தேசியத் தலைவராக இருந்தார். அன்னாருக்கு இறைவன் உயர்ந்த ஜன்னதுல் பிர்தௌஷ் எனும் சுவனபதி கிடைக்கவும், அவருடைய கப்று சுவனபதியால் விசாலமாக்கப்படவும் எல்லாம் வல்ல இறைவனிடம் நாம் பிரார்த்திப்போம். இருந்தாலும் 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் 16 இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றில் துயர் கொண்ட ஒரு நாளாகும்.

"இந்த மையத்தை குளிப்பாட்டுவதில் உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். தண்ணீரும் தேவையில்லை, பன்னீரும் தேவையில்லை. தூக்கி விரைவில் எடுத்து தொழுது விட்டு அடக்குங்கள். கண்ணீர் அஞ்சலிகள் போதும். கவலைகளை மறந்து தூக்குங்கள்.

எனது பணி இனி முடிந்தது உங்கள் பணிகளை செய்வதற்காய் புறப்படுங்கள்" எனும் அவரது கூற்றுப்படியே மக்கள் வெள்ளம் புடைசூழ கப்ரை நோக்கி பயணித்தார்.

(எம்.எஸ்.எம்.சாகிர்)

***முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரப் மறைந்து இன்றுடன் 21 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.***



# அஷ்ரப் எனும் அரசியல் ஆளுமை

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறையில் முஹம்மத் ஹுசைன் விதானை - மதீனா உம்மாஹ் தம்பதியின் மகனாக 1948 ஒக்டோபர் 23ஆம் திகதி மூன்று சகோதரிகளுக்கு ஒரே சகோதரனாக மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்திலும், பின்னர் இடைநிலைக் கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, கல்முனை உவெஸ்லி பாடசாலை, அலெக்ஸாண்ட்ரியா கல்லூரி ஆகியவற்றிலும் கற்ற முன்னாள் அமைச்சர் மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரப். பின்னர் 1975ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக நியமனம் பெற்றார். பின் சட்டமாணி, சட்ட முதுமாணிப் பட்டங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். 1995இல் அமைச்சராக இருக்கும்போதே சட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், 1997இல் ஜனாதிபதி சட்டத்தரணியானார்.

பேரியல் இஸ்மாயில் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட மர்ஹும் அஷ்ரபுக்கு அமான் அஷ்ரப் எனும் ஓர் ஆண் மகன் உள்ளார். மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரப், தனது அரசியல் வாழ்வை ஈழத்தின் தந்தை என்றழைக்கப்படும் தந்தை செல்வாவை முன்மாதிரியாகக்கொண்டு ஆரம்பித்தார்.

1976இல் பொலிஸாரால் புத்தளம் பள்ளி வாசலில் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்கள் பற்றி, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மௌனம் சாதித்தபோது, இதுபற்றி பேசிய ஒரேயொருவரான தந்தை செல்வாவை மர்ஹும் அஷ்ரப் வியந்து பாராட்டிப் பேசினார்.

1977இல் தந்தை செல்வநாயகத்தின் மறைவுக்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியை வழிநடத்தும் பொறுப்பை அமிர்தலிங்கம் ஏற்றபோது, இவர், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை (MULF) ஆரம்பித்து, அமிர்தலிங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்தார்.

தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் மேடைகளில்அமிர்தலிங்கத்துடன் இணைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹும் அஷ்ரப், தமிழ் ஈழத்துக்காக வேகத்துடன் பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்டார். இவ்வேளையில் தான் அண்ணன் அமிர்தலிங்கம், தமிழ் ஈழம் அமைக்க முடியாமல்போனால், தம்பி அஷ்ரப் அதைச் செய்வான் என பகிரங்கமாக அறிவித்தார்.

பின்னர் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கல்முனை, சம்மாந்துறை, புத்தளம், மூதூர் ஆகிய இடங்களில் முஸ்லிம் வேட்பாளர்கள் சூரியன் சின்னத்தில் களமிறக்கப்பட்டனர். இதில் மர்ஹும் அஷ்ரப் போட்டியிடவில்லை. இத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் வேட்பாளர்கள் அமோக வெற்றிபெற்று, நாட்டின் வரலாற்றில் தமிழ்க்கட்சி ஒன்று இரண்டாவது அதிகூடிய ஆசனங்களைப் பெற்றது. ஆயினும், இந்தக் கட்சியில் போட்டியிட்ட முஸ்லிம்கள் எவரும் வெற்றிபெறவில்லை.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை வேறு கோணத்தில் மர்ஹும் அஷ்ரப் உற்றுநோக்கினார். அஷ்ரபின் தமிழ் ஈழத்தின் மீதான விருப்பம் மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் இலட்சியத்தை பகிர்ந்துகொள்ளும் விருப்பத்துக்கப்பால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் வேறு அபிலாஷைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர் உணர்ந்தார்.

1981ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தமிழர்களை மட்டும் போட்டியிட வைத்தது. அத்தேர்தலில் முஸ்லிம்களை இணைக்க மர்ஹும் அஷ்ரப் முன்வைத்த கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனால், மர்ஹும் அஷ்ரப் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியிலிருந்து முற்றாக விலகி, தனித்துச் செல்ல தீர்மானித்தார்.

தமிழ், சிங்கள அரசியலிலிருந்து வேறுபட்ட சுயாதீனமான அரசியல் தேவைப்பாடு முஸ்லிம்களுக்கு அவசியம் என்பதை உணர்ந்த மர்ஹும் அஷ்ரப், அஹமட்லெப்பையுடன் கூட்டுச் சேர்ந்து, 1981 செப்டெம்பர் 21இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் புதிய கட்சியை காத்தான்குடியில் ஆரம்பித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஆரம்பத்தில் அரசியல் பிரச்சினைகளைவிட, அதிகமாக சமூக கலாசார விடயங்களில் அக்கறைகொண்ட கிழக்கு மாகாண அமைப்பாகவே செயற்பட்டது.





1985ஆம் ஆண்டு கல்முனை - காரைதீவு, தமிழ் – முஸ்லிம் இன முரண்பாடுகள் மர்ஹும் அஷ்ரபை பாதித்தனால் கொழும்பு நோக்கி குடிபெயர்ந்தார். இந்த கொழும்பு நோக்கிய நகர்வு அவரது அரசியலின் மைல்கல்லாக அமைந்தது. இவரது அரசியல் முயற்சிகளுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா அடங்கலாக முஸ்லிம்கள் பலர் ஒத்துழைப்பு நல்கினர். இவ்வேளையில் அஷ்ரபின் அறிமுகம் ஹக்கீமுக்கு ஏற்பட்டது.

கிழக்குக்கப்பாலும் முஸ்லிம் காங்கிரஸ் விரிந்து செல்லவேண்டிய தேவைப்பாட்டை இனங்கண்ட மர்ஹும் அஷ்ரப், 1986ஆம் ஆண்டு நவம்பர் 29இல் புஞ்சிபொரளையில் நாடளாவிய ரீதியில் கட்சி மாநாடொன்றைக் கூட்டி, முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைமைப் பொறுப்பை அஹமத்லெப்பையிடமிருந்து பொறுப்பேற்ற மர்ஹும் அஷ்ரப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அகில இலங்கை ரீதியிலான கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து, கட்சியின் நோக்கங்களை மீளமைத்து யாப்பை திருத்தி எழுதி, 1988ஆம் ஆண்டு பெப்ரவரி 11இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 'மரம்' சின்னத்துடன் தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 1988இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கியது. இத்தேர்தலில் வடக்கு – கிழக்கில் 17 இடங்களையும், மேற்கு, வடமேற்கு, மத்திய, தென் மாகாணங்களில் 12 இடங்களையும் கைப்பற்றியது. வடக்கு, கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் முறையே 9, 3, 5 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. புதிதாக உருவாக்கப்பட்ட இக்கட்சியின் அமோக வெற்றி மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடுத்தகட்ட நகர்வுகளுக்கு பெரும் உந்துசக்தி அளித்தது. முதலமைச்சர் வரதராஜ பெருமாளின் தலைமையிலான வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திற்கு பிரதான எதிர்க்கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விளங்கியது.

பின்னர் 1988இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஆர்.பிரேமதாஸவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்தது. அதன்பின்னர், 1989இல் இடம்பெற்ற நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு, மாவட்ட ரீதியாக மூன்று ஆசனங்களும் தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றுமாக நான்கு ஆசனங்களைப் பெற்றது. இதில், அம்பாறை மாவட்டத்திலிருந்து மர்ஹும் அஷ்ரப், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஹிஸ்புல்லாஹ், வன்னியிலிருந்து அபூபக்கரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். நாடாளுமன்றத்தில் மும்மொழிப் பேச்சுத் திறனாலும், துணிச்சலும் நிறைந்த உரைகளாலும் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தார் மர்ஹும் அஷ்ரப்.

அவரது வாழ்வில் நடந்த சுவாரஸ்யமான நிகழ்வுகளில் ஒன்று - அதாவது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மூலம் நாடாளு மன்றத்துக்கு முதன்முதலாகத் தெரிவாகி, அங்கு உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தபோது, பேச ஆரம்பித்த மர்ஹும் அஷ்ரப், நாடாளுமன்ற வரலாற்றில் முதற்றடவையாக இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம்... என்று பேச ஆரம்பித்தபோது நாடாளுமன்றத்திலுள்ள ஏனைய முஸ்லிம் தலைவர்கள் கூச்சலிட்டு பேச முடியாதளவு தடுத்தனர். அப்போது சபாநாயகராக இருந்த மர்ஹும் எம்.எச்.முஹம்மத், சபையை அமைதிப்படுத்தி, மீண்டும் பேச வாய்ப்பளித்தார். அப்போதும் அஷ்ரப், முன்பு சொன்னது போன்று பேச, திரும்பவும் கூச்சலிட்டனர். அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், அவர் என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம். அவரைப் பேச விடுங்கள் என்று கூறியபோது, அஷ்ரப் மீண்டும் பேச ஆரம்பித்தார்.

நாடாளுமன்ற வரலாற்றில் முதற்றடவையாக இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம் கட்சித் தலைவர் என்றவகையில் நான் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன் என்று கூறியபோது அனைவரும் வாயடைத்துப் போயினர். சபையும் அமைதியானது. அந்தவேளையில் ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற தேசிய கட்சிகள் மூலம்தான் முஸ்லிம்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். சபையில் அனைவரும் மர்ஹும் அஷ்ரப் முதல் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் என்று கூறப்போகிறார் என்றே கூச்சலிட்டனர். மிகுந்த சாணக்கியமும் சமர்த்தியமும் ஆற்றலும் மும்மொழி புலமையும் மிக்கவர்தான் மர்ஹும் எம்.எச்.எம். அஷ்ரப்.

1993ஆம் ஆண்டு இடம்பெற்ற மே தின ஊர்வலத்தில் ஜனாதிபதி பிரேமதாஸ உயிரிழந்தார். இதன் காரணமாக 1994இல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், அஷ்ரப் சந்திரிக்காவுடன் 1994இல் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டார். இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு – கிழக்கில் சொந்த சின்னத்திலும், வேறு மாகாணங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அக்கட்சியினுடைய சின்னத்திலும் போட்டியிட்டது.

இத்தேர்தலில் பொதுஜன முன்னணி 105 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 94 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையும், ஒரு தேசியப்பட்டியல் அங்கத்தவரையும் பெற்றது. இத்தேர்தல் மூலமாகவே ரவூப் ஹக்கீம் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

சந்திரிக்கா குமாரதுங்க அரசாங்கத்தை நிறுவுவதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம்பேசும் சக்தியாக விளங்கியது. மர்ஹும் அஷ்ரப் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஹிஸ்புல்லாவும், அபூபக்கரும் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். ரவூப் ஹக்கீம் குழுக்களின் தவிசாளராக நியமனம் செய்யப்பட்டார். மர்ஹும் அஷ்ரப் இளைஞர்களுக்கு துறைமுக அதிகாரசபையிலும் பல்வேறு திணைக்களங்களிலும் வேலைவாய்ப்புகளை வழங்கினார்.

அரசியல் மட்டுமல்லது, கவிஞர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமைகொண்ட இவர், 'நான் எனும் நீ' எனும் கவிதை நூலையும் எழுதி, அதனை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தியாவிலிருந்து கவிக்கோ அப்துல் ரஹ்மானை அழைத்து வெளியிட்டார். அவருக்கு பொற்கிழி, பொன்னாடை வழங்கிக் கௌரவித்தார். அந்த நேரத்தில் அவரது நூலே கவிதை நூல்களிலே மிகப்பெரிய நூலாகக் காணப்பட்டது. அந்நூலில் அவரது மரணம் பற்றிய கவிதை எழுதப்பட்டிருந்தமை குறித்து அவரது மறைவுக்குப் பிறகு பலரும் சிலாகித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.



பெருந்தலைவர் மர்ஹும் அஷ்ரப், சாதாரண மனிதன் முதல் உயர்ந்த இடத்திலுள்ளோர் என யார் வந்து நூல் விழாவுக்கு அழைத்தாலும் செல்வார். சன்மானமும் வழங்குவார். அவ்விழாவில் உரையாற்றும்போது அரசியல் பேசமாட்டார்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் யாழ்ப்பாணத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு முஸ்லிம் மாணவர்கள் தயங்கினர். இதேபோல் தமிழ் - முஸ்லிம் சமூகத்திற்கிடையில் உருவான பிணக்குகளும் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்தும் மாணவர்கள் வெளியேறுவதற்கு காரணமாக அமைந்தது. இதனை உணர்ந்த முன்னாள் அமைச்சர் மர்ஹும் அஷ்ரப், ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான நடவக்கைகளை முன்னெடுத்தார். பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியில் 1995 ஒக்டோபர் 23 இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவினார். தற்போது இலங்கையின் ஒரு முன்னணிப் பல்கலைக்கழகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திகழ்கின்றது. இதன் இன்னுமொரு மைல்கல் என்னவென்றால், இப்பல்கலைக்கழகத்திலே கற்று, அங்கேயே பேராசிரியராகி, தற்போது அப்பல்கலைக்கழகத்திலே உபவேந்தராக, பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இவரது இந்த நியமனம் மூலம் மர்ஹும் அஷ்ரபின் கனவு நனவாகியுள்ளது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முன்னாள் அமைச்சர் மர்ஹும் எம்.எச்.எம். அஷ்ரப், இலங்கையிலுள்ள வெவ்வேறு இன மக்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்கி, தேசிய நீரோட்டத்தில் அரசியல் பயணத்தைக் கொண்டுசெல்வதற்காக 1998இல் மற்றுமொரு அரசியல் கூட்டணியை நிறுவ, கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இக்கட்சியானது 'தேசிய ஐக்கிய கூட்டமைப்பு' எனும் பெயரில் புறா சின்னத்துடன் தேர்தல் ஆணையாளரினால் 1999 ஓகஸ்ட் 23இல் பதிவுசெய்யப்பட்டது. 'ஒவ்வொரு குடிமகனும் இலங்கைத் தாய்நாட்டுக்குத் தேவை. எல்லா குடிமகன்களுக்கும் தேவை ஒரே இலங்கை' எனும் தொனிப்பொருளில் 2012 இல் ஒற்றுமை நிறைந்த இலங்கையை உருவாக்குவதாக இருந்தது. ஆயினும், அஷ்ரபின் மரணத்திற்குப்பின்னர் ஹக்கீம், பேரியல் ஆகிய இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அது இடம்பெறவில்லை.

2000ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ - 17 ரக ஹெலிகொப்டரில் செப்டெம்பர் 16 அன்று அம்பாறை நோக்கி பயணித்தபோது, கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பகுதியில் வைத்து விமானம் விபத்துக்குள்ளானதில் எம்.எச்.எம்.அஷ்ரப் உயிரிழந்தார். பயணித்த அனைவரும் அதில் உயிரிழந்தனர்.

மறைந்த அரசியல் தலைவர்களான மர்ஹும்களான சேர். ராசிக் பரீட், டாக்டர் எம்.சி. எம்.கலீல், எம்.ஏ.பாக்கீர் மாக்கார், பதியுதீன் மஹ்மூத் போன்ற அரசியல் தலைவர்களைப் பற்றிய நூல்கள் நிறைய இருக்கின்றன. ஆனால், மர்ஹும் அஷ்ரப் பற்றி ஒரு நூல் கூட வெளிவரவில்லை.

மர்ஹும் அஷ்ரப் பற்றிய நூல்கள் குறைந்தது பத்து நூல்களாவது வெளிவந்திருக்க வேண்டும். ஆனால், அவரது மறைவுக்குப் பின் ஒரு நூல் கூட வெளியிடுவதற்கு யாரும் சிந்திக்கவில்லை. இதனை அவரது கட்சியோ, கட்சி அங்கத்தவர்களோ, அவரது குடும்ப உறுப்பினர்களோ கட்டாயம் செய்திருக்க வேண்டும். யாருமே அக்கறை எடுத்துச் செய்யவில்லை. அனைவரும் அலட்சியமாக இருக்கின்றனர்.

அஷ்ரபைப் பற்றி அறிய வேண்டுமானால் அவர் எழுதிய 'நான் எனும் நீ' எனும் கவிதை நூல் மட்டுமே உள்ளது. எனவே, அவரது நாடாளுமன்ற உரைகள், அவரது பொக்கிஷங்கள் போன்றவை அச்சுப் பதிப்பாக வெளிவரவேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததியினர் அவரைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். அது ஓர் ஆவணமாகவும் இருக்கும். இனியாவது இச்செயற்பாட்டை முன்னெடுப்பார்களா?

பெருந்தலைவர் அஷ்ரப் மறைந்த செய்தி அறிந்து நாடே சோகத்தில் ஆழ்ந்தது. அவரது இறுதி ஊர்வலத்தில் இன, மத, சாதி, பேதம் பாராது அனைத்து மக்களும் கலந்துகொண்டமை ஏனைய இனத்தவர்களும் அவர் மீது வைத்திருந்த அன்பு மற்றும் மரியாதையை பறைசாற்றியது.


முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல், இலங்கையின் அனைத்து மக்களுக்கும் அரும்பணியாற்றியுள்ள அன்னாரின் இழப்பு நாட்டு மக்களுக்கு ஈடுசெய்ய முடியாததொரு பேரிழப்பாகும்.

அன்னாருக்கு உயர்ந்த சுவர்க்கமான ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் வழங்க வல்ல இறைவன் துணைபுரிவானாக!





# வடகொரியாவின் கிழக்கு கடலில் சக்திவாய்ந்த ஏவுகணைகள்




வடகொரியா, நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய அதிசக்தி வாய்ந்த இரு ஏவுகணைகளை தனது கடற்பரப்பில் பரிசோதித்துள்ளதாக தென் கொரியா நேற்று (15) அறிவித்துள்ளது.

வடகொரியாவின் கிழக்கு கடற்பரப்பில் பாரிய ஏவுகணைகள் வெடித்துச் சிதறியுள்ளன.

இதனை ஜப்பானின் கடற்பாது காப்புப் படையினரும் உறுதி செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடற்பகுதியில் பாரிய வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் ஆரம்பத்தில் அது என்னவென உறுதிசெய்து கொள்ள முடியவில்லையெனவும் தென்கொரியா அறிவித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் பிராந்தியத்துக்கான ஆபத்து எனவும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை சுட்டிக்காட்டியுள்ளது.

இரு ஏவுகணைகளும் அணுவாயுதங்களைத் தாங்கியிருக்கக் கூடும் என சர்வதேச நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அணுவாயுத பரிசோதனைகளுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தடைவிதித்துள்ள நிலையில் இவ்வாறு ஏவுகணைகள் வெடிக்கச் செய்துள்ளமை சர்வதேச விதிமுறைகளை மீறும் செயலெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நீண்டதூரம் சென்று தாக்கக் கூடிய வகையில் அதிசக்தி மிக்க ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக வடகொரியா கடந்த திங்கட்கிழமை அறிவித்தது. அந்நாட்டு அரச ஊடகம் உத்தியோகபூர்வமாக இந்தச் செய்தியை வெளியிட்டதுடன் அதுதொடர்பான புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

வடகொரியாவால் பரிசோதிக்கப்பட்ட இந்த ஏவுகணை ஜப்பானை தாக்கும் என அரச ஊடகங்களால் சொல்லப்பட்டுள்ளது. அந்தளவுக்கு தூரம் பயணிக்கக் கூடியது என்பது ஊடகங்களால் சொல்லப்பட்டாலும் அந்தச் சொல்லாடல் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறித்த ஏவுகணை ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தொலைவுக்கு பயணம் செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஏவுகணைப் பரிசோதனையானது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நியமங்களை மீறவில்லையென அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

உணவுப் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி இருந்தபோதிலும் ஆயுதங்களை உருவாக்கும் திறன் குறையவில்லையென வடகொரிய இராணுவம் அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனையானது அண்டை நாடுகளுக்கு உள்ள ஆபத்தை எடுத்துக்காட்டுவதாக அமெரிக்க இராணுவத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் இதுகுறித்து கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# டன்யாவுக்கு என்னவாயிற்று?

ஐந்து நாட்களாக காணாமல்போயிருந்த பிரித்தானியாவின் மிகப் பிரபலமான நடிகை டன்யா பியர் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். அவர் மன அழுத்தத்தில் இருப்பதாகவும் யாரிடமும் பேச விரும்பவில்லையெனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் எங்கு மீட்கப்பட்டார், எவ்வாறான நிலைமையில் காணப்பட்டார்? போன்ற விடயங்களை பொலிஸார் வெளிப்படுத்தவில்லை. டன்யாவின் குடும்பத்தினருக்கும் இதுகுறித்த தகவல் வழங்க மறுக்கப்பட்டுள்ளது.

எனினும் டன்யா பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார். அவரது உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டதையடுத்து டன்யாவுக்கு ஏதும் அச்சுறுத்தல், துன்புறுத்தல் நிகழ்ந்திருக்கலாம் என அவரது ரசிகர்கள் கவலையடைந்துள்ளனர்.

டன்யா காணாமல்போன நாள்முதல் #FindTanyaFear என்ற ஹேஷ்டெக்கில் அவரைத் தேடும்படலம் சமூக வலைத்தளங்களில் ரசிகர்களால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஹெய்ட்டி ஜனாதிபதி கொலையில் புதிய திருப்பம்

## பிரதமருக்கு தொடர்பிருப்பதாக தகவல்

## சட்டமா அதிபர் அதிரடியாக பதவி நீக்கம்

ஹெய்ட்டி ஜனாதிபதி ஜொவெனெல் மொய்ஸின் படுகொலையுடன் அந்நாட்டுப் பிரதமர் ஏரியர் ஹென்ரிக்கு தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவலை வெளிப்படுத்திய அந்நாட்டு சட்டமா அதிபர் அதிரடியாக பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். பதவி நீக்கத்துக்கான உத்தரவு பிரதமரால் நேற்று (15) பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி மொஸ்ய்ஸ், தனியார் குடியிருப்புத் தொகுதியில் வைத்து கடந்த ஜூலை 07 ஆம் திகதி ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இவரது கொலை அந்நாட்டு மக்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் சர்ச்சைக்குரிய விடயமாகவும் மாறியது. அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில் ஜனாதிபதியை கொலைசெய்த சந்தேக நபர்களில் ஒருவருக்கும் பிரதமருக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளதாக சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினால் அந்நாட்டு மக்கள் பெரும் குழப்பமடைந்தனர். எனினும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லையெனக் கூறி சட்டமா அதிபர் பதிவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்காரணமாக ஹெய்ட்டியில் உள்நாட்டு மோதல் இடம்பெறக்கூடும் என சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலக செய்திகள்

# உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் நேற்றுமுதல் விண்ணப்பம்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் நேற்றுமுதல் விண்ணப்பித்து வருகின்றனர்.

தமிழகத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அடுத்தமாதம் 6 மற்றும் 9ஆம் திகதிகளில் நடைபெறும் என மாநில தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று தொடங்கியுள்ளது. இந்நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ளன.

தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், தி.மு.க. சார்பில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பங்களை அளிக்கலாம். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினருக்கு ரூ.10 ஆயிரம், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினருக்கு ரூ.5 ஆயிரம் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை மாவட்ட செயலாளரிடமோ அல்லது அண்ணா அறிவாலயத்திலோ ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தலிபான் தலைவர்களிடையே மோதல்

ஆப்கானிஸ்தானில் புதிய அரசை கட்டியெழுப்புவது தொடர்பாக தலிபான் தலைவர்களுக்கு இடையே பெரியளவிலான மோதல் வெடித்திருப்பதாக சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலிபான் இயக்கத்தின் இணை நிறுவனரும் மூத்த தலைவருமான முல்லா அப்துல் கனிக்கும் தலிபான் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் ஒருவருக்கும் இடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அப்துல் கனி, கடந்த சில நாட்களாக பொதுவெளிக்கு வராத நிலையில், தலிபான் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான்களால் ஆப்கானிஸ்தானை நிர்வகிக்க முடியாதென சர்வதேச அமைப்புகள் தொடர்ச்சியாக கருத்து வெளியிட்டு வருகின்றன. அவர்களின் நிர்வாகம் ஜனநாயகத்துக்கு விரோதமாக அமையுமெனவும் அவ்வமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில் நிர்வாகம் தொடர்பிலான குழப்பம் அமைச்சரவையில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பாரம்பரிய நிகழ்வில் 1,400 டொல்பின்கள் கொலை



## ஃபாரோ தீவுவாசிகளின் கொடூர செயலுக்கு இயற்கை ஆர்வலர்கள் கடும் கண்டனம்

டென்மார்க், ஃபாரோ தீவுகளில் ஒரேநாளில் ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட டொல்பின்கள் வேட்டையாடப்பட்ட நிகழ்வு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெனிஷ் நாட்டில் கடந்த 4 நூற்றாண்டுகளுக்கும் மேலாக பாரம்பரிய நிகழ்வாக நடைபெறும் கிரீன் டிராப் வேட்டையின் ஒரு பகுதியாக ஃபாரோ தீவுகளின் கடற்கரைகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயிரத்து 428 டொல்பின்கள் கொல்லப்பட்டன.

வடக்கு அட்லாண்டிக் தீவுகளில் டொல்பின்களை வேட்டையாடுவது என்பது இறைச்சி, மருத்துவ பயன்பாடு மற்றும் பொழுதுபோக்கு அம்சமாக பார்க்கப்படுகிறது.

கடலில் கடந்த 12ஆம் திகதி மிதந்த டொல்பின்கள் கொல்லப்பட்டு மோட்டார் படகுகள் மூலம் கரைக்கு கொண்டுவரப்பட்டு நீண்ட வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அப்போது டொல்பின்களின் உடல்களில் இருந்து வெளியான இரத்தத்தால் நீல வண்ண கடற்பரப்பு, செந்நிறமாக காட்சியளித்தது. டொல்பின்களை கொல்வதை பாரம்பரிய நிகழ்வாக மேற்கொண்டாலும் உலக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த கொடூரத்தை பார்த்து ஆவேசமடைந்துள்ளனர்.

மேலும் கடல்சார் உயிரின பாதுகாப்பு அமைப்புகளிடம் இருந்தும் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அதேவேளையில் தங்களின் உணவுத் தேவைக்காகவே டொல்பின்களை கொள்வதாகவும், தங்கள் உரிமையை பாதுகாக்க போராடுவோம் என்றும் ஃபாரோ தீவுவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# பாகிஸ்தானுடனான உறவு அமெரிக்காவால் மீள்பரிசீலனை



ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு உதவினால் பாகிஸ்தானுடனான உறவைத் துண்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வெளியுறவு அமைச்சர் என்டனி பிளிங்கென், பாகிஸ்தான் இரட்டை வேடம் பூண்டு வருவதாக தெரிவித்தார். ஆப்கானில் பாகிஸ்தானின் பங்கு என்ன என்பதைப் பொருத்து அந்நாட்டுடனான உறவைத் துண்டிப்பது குறித்து அமெரிக்கா முடிவெடுக்கும் என்றும் பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தலிபான் அமைச்சரவையில் ஹக்கானி தீவிரவாதிகளை இடம்பெறச் செய்ய பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகளையும் பிளிங்கென் சுட்டிக்காட்டினார். காபூலில் தீவிரவாதத் தாக்குதலில் அமெரிக்கர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படும் பாகிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்று வருகிறது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## T20 உலகக்கிண்ண தொடரில் குசல் பெரேரா, மதுசங்க விளையாடுவதில் சந்தேகம்




*(ஏ. அகீல் சிஹாப்)*

2021ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த உலகக்கிண்ண தொடருக்கான இலங்கை அணியின் குழாமில் இடம்பெற்றிருந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா மற்றும் சகலதுறை வீரரான லஹிரு மதுசங்க ஆகியோர் உபாதை காரணமாக உலகக்கிண்ண தொடருக்கான இலங்கை அணியின் குழாமிலிருந்து விலகுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த போட்டியின்போது இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களாக 39 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஆரம்ப துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா, போட்டியின்போது தசைப்பிடிப்புக்குள்ளான நிலையில் மிகவும் சிரமப்பட்டு துடுப்பெடுத்தாடினார். பின்னர் அவர் களத்தடுப்பில் களமிறங் கவில்லை. குசல் பெரேராவுக்கு பதிலாக விக்கெட் காப்பாளராக தினேஷ் சந்திமால் செயற்பட்டிருந்தார்.

மேலும் சகலதுறை வீரரான லஹிரு மதுசங்க களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, பௌண்டரி எல்லையில் வைத்து பந்தை தடுத்து நிறுத்தும் போது அவருடைய தோள்பட்டை நிலத்தில் பலமாக தாக்கியது. இவ்வாறான நிலையில் தற்போது இருவரும் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரில் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## ஐக்கிய அரபு இராச்சியம் புறப்பட்ட சமீர, ஹஸரங்க

விராட் கோஹ்லி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாட ஒப்பந்தமாகியுள்ள இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான துஸ்மந்த சமீர மற்றும் சுழற்பந்து வீச்சாளரான வனிந்து ஹஸரங்க ஆகிய இருவரும் நேற்று ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டனர்.

2021ஆம் ஆண்டிற்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாவது பாதி ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்கவுள்ள வீரர்கள் அனைவரும் தற்சமயம் ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி படையெடுத்து கொண்டிருக்கின்றனர்.



இந்நிலையில் 2021 ஐ.பி.எல் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மாற்று வீரர்களாக இடம்பெற்றுள்ள இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான வனிந்து ஹஸரங்க மற்றும் வேகப்பந்து வீச்சாளரான துஸ்மந்த சமீர ஆகியோர் ஐ.பி.எல் தொடரில் விளையாடுவதற்காக நேற்று ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டனர்.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இறுதி தொடரான 3 போட்டிகள் இருபதுக்கு 20 சர்வதேச தொடரானது நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்த நிலையில் குறித்த தொடரில் விளையாடிய இருவரும் நேற்று புறப்பட்டனர். தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் குறித்த வீரர்கள் பயோ-பபுள் விதிமுறைக்குள் உள்ளாகியிருந்ததன் காரணமாக நேரடியாக அணியில் இணையமுடியும்.

2021 ஐ.பி.எல் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டத்தில் விராட் கோஹ்லி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி தங்களது முதல் போட்டியில் எதிர்வரும் திங்கட்கிழமை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

## 2021 ஐ.பி.எல் நிறைவடைந்து இரு நாட்களில் புதிய அணிகளின் ஏலம்?




எட்டு அணிகள் பங்கேற்கின்ற 2021ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி நிறைவுக்கு வருகின்ற நிலையில் அடுத்த இரண்டு நாட்களில் புதிய அணிகளை தெரிவு செய்யும் ஏலம் நடைபெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் கடந்த சில வருடங்களாக 8 அணிகள் பங்கேற்றுவருகின்ற நிலையில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 15ஆவது தொடரில் மேலும் இரு அணிகளை இணைப்பதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவெடுத்தது. அதன் படி இதற்கான அழைப்பை ஏற்கனவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) வெளியிட்டிருந்தது.




இந்நிலையில் புதிய அணிகளுக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் 17ஆம் திகதி, அதாவது ஐ.பி.எல் தொடர் நிறைவடைந்து இரு நாட்களில் நடைபெறும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இரண்டு அணிகள் கூடுதலாக சேர்வதால் ஒவ்வொரு அணியும் நான்கு வீரர்களை மட்டும் தக்கவைத்துக் கொண்டு பிற வீரர்களை வெளியேற்ற வேண்டும். அதன்பின் பொது ஏலத்தில் வீரர்களை தேர்வு செய்ய வேண்டும் என்ற நிலை காணப்படுகிறது.

## இலங்கையை க்ளீன் சுவீப் செய்த தென்னாபிரிக்கா



இலங்கை அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை தென்னாபிரிக்க அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி இலங்கை அணியை சொந்த மண்ணில் வைத்து க்ளீன் சுவீப் செய்துள்ளது.

சுற்றுலா தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது. இருதரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் தொடராக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் இரு போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரை தன்வசப்படுத்தியிருந்த நிலையில், ஆறுதல் வெற்றியை நோக்கி இலங்கை அணி நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் களமிறங்கியது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 120 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் குசல் பெரேரா நிதானமாக 39 ஓட்டங்களையும்இ சமிக்க கருணாரத்ன 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

121 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 14.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 10 விக்கெட்களால் இலகுவான வெற்றியை பதிவு செய்தது. இதன் மூலம் ஒருநாள் தொடரை இழந்த தென்னாபிரிக்க அணி இருபதுக்கு 20 சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான குயின்டன் டி கொக் தெரிவான அதேவேளைஇ தொடர் ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்.




## ஒலிம்பிக் போட்டியை நடத்த உக்ரேன் ஆர்வம்



ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான முறையான பேச்சுவார்த்தையில் நுழைய உக்ரேன் விரும்புகிறது என சர்வதேச ஒலிம்பிக் பேரவை தெரிவித்துள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் தலைமையகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு அதிகாரிகளை விரைவில் அனுப்புவதாக உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறினார். ஒலிம்பிக் போட்டியை நடத்தும் நாட்டைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு 2030ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. அப்போது உக்ரேன் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்காக போட்டியில் கலந்துகொள்ள உக்ரேன் முயற்சி செய்தது. அண்டை நாடான ரஷ்யாவுடனான மோதல்களுக்கு மத்தியில் அரசியல் மற்றும் பாதுகாப்பு குழப்பம் காரணமாக நிராகரிக்கப்பட்டது.

## கார் பந்தயப் போட்டியில் ஏற்பட்ட கோர விபத்து



இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயத்தின் போது நடைபெற்ற விபத்து காணொளி இணையத்தில் வைரலாகிறது. பார்ப்பவரை பதற வைக்கும் குறித்த காணொளி இரண்டு போட்டியாளர்களையும் பந்தயத்தில் இருந்து வெளியேற்றியது.

இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயத்தின்போது வெர்ஸ்டாப்பனின் ரெட் புல் காற்றில் பறந்து வந்து மெர்சிடிஸ் மீது மோதியதில் நிகழ்ந்த விபத்து அனைவரையும் பதற வைக்கிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் நடைபெற்ற இந்த விபத்தில் ஓட்டுநர்கள் இருவருக்கும் ஓரளவு தான் காயம் என்பது ஆறுதல் தருகிறது.

ஃபார்முலா 1, டபிள்யூ.12 இல் நடைபெறவிருந்த மிகப்பெரிய இழப்பு தவிர்க்கப்பட்டது. வெர்ஸ்டாப்பனின் வலது பின் டயர் ஹாமில்டனின் ஹெல்மெட்டைத் தாக்கும் படங்களை துல்லியமாக இந்த வீடியோ காட்டுகிறது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகள், பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளில் இடம்பிடிக்க இந்த விபத்து காரணமானது. பிரபல கார் பந்தய வீரர்களான லூயிஸ் ஹாமில்டன், மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் ஆகிய இருவரும் பந்தயத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

## நாய்க்கு விருது வழங்கிய ஐ.சி.சி




ஐ.சி.சி என்கிற சர்வதேச கிரிக்கெட் பேரவை மாதத்தின் சிறந்த வீர வீராங்கனை விருதோடு மாதத்தின் சிறந்த நாய் என்ற விருதையும் கடந்த ஓகஸ்ட் மாதத்தின் விருது பட்டியலில் சேர்த்தது. இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

ஓகஸ்ட் மாத சிறந்த வீரராக ஜோ ரூட் தேர்வு செய்யப்பட, மகளிர் கிரிக்கெட்டில் அயர்லாந்தின் ஈமியர் ரிச்சர்ட்சன் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் இவர்களோடு புதிதாக ஒரு ஜீவனுக்கும் விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. அதாவது போட்டியின்போது இந்த நாய் மைதானத்திற்கு ஓடிவந்து பந்தைப் பிடிக்கும் முயற்சியை பாராட்டி இந்த விருது கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அயர்லாந்து கிரிக்கெட்டில் இந்த நாய்தான் சிறந்த பீல்டர் என்று வர்ணிக்கப்பட்டது. மேலும் பிளேயர் ஒஃப் த மூமண்ட் விருதையும் இந்த நாய் தட்டிச் சென்றது. ஐ.சி.சி இந்த வணக்கத்துக்குரிய நாயின் புகைப்படத்தை தன் உத்தியோகபூர்வ ட்விட்டரில் வெளியிட்டு மகிழ்ந்துள்ளது. மேலும் நாயின் அசாத்தியமான ஓடும் திறன் என்று குறிப்பிட்டு ஐ.சி.சி விதந்தோதியுள்ளது. இது தொடர்பான வீடியோவையும் ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.